விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 29 ஞாயிற்றுக்கிழமை (13.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 084

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சி வலுப்பெற்று வருகிறது

## சென்னையிலிருந்து சம்பந்தன் அறிக்கை

(சென்னை)

**இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதில் தொடர்ச்சியாக முயற்சித்து வருகின்றன. குறிப்பாக யுத்தம் முடிபடைந்ததைத் தொடர்ந்து கௌரவமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற எமது முயற்சி வலுப்பெற்று வந்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

சென்னை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சம்பந்தன் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாகவும் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இத்தகைய அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதில் மேலும் தாமதம் காட்டுவதற்கு நியாயம் கற்பிக்க முடியாது என்றும் நாம் வலியுறுத்தியுள் (20ஆம் பக்கம் பார்க்க)



ஜப்பானில் இடம்பெற்ற சுனாமியால் தரைக்கு வந்துள்ள பாரிய கப்பல்கள்...

# சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு அவுஸ்திரேலியா ஆதரவு தெரிவிப்பு

(சிட்னி)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தையும் அதன் சட்ட நடவடிக்கைகளையும் தாங்கள் முழுமையாக ஆதரிப்பதாக அவுஸ்திரேலிய பிரதமர் யூலியா கிலாட் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவின் இரட்டைக் குடியுரிமை பெற்ற பாலித்த ஹோகன வகித்த பங்கிற்காக அவருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

பாலித ஹேகன அவுஸ்திரேலிய குடியுரிமையை கொண்டிருப்பவர் என்ற ரீதியில் குறிப்பிட்ட இவ் விவகாரம் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி இன்னர் சிற்றி பிரஸ் அவுஸ்திரேலியப் பிரதமர் யூலியா கிலாட்டிடம் கருத்து கேட்டிருந்தது.

இவ் வழக்குத் தொடர்பான முழுமையான விபரங்கள் எதுவும் தனிப்பட்ட ரீதியில் எனக்குத் தெரியாது. அதேநேரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தையும் அதன் சட்ட நடவடிக்கைகளையும் நாங்கள் ஆதரிக்கிறோம். நடப்பிலுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அரசியல் தலைவர்கள் கருத்துக்களை வெளியிடாமல் இருப்பதுதான் நல்லது என அவுஸ்திரேலியப் பிரதமர் யூலியா கிலாட் தெரிவித்துள்ளார்.

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைவதற்கான முயற்சியில் முக்கிய பங்கு வகித்த பாலித ஹோகனவுக்கு எதிரான முறையான சுதந்திரமான விசாரணைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அவுஸ்திரேலிய தொழிற் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மோர்பே வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# சர்வதேச விசாரணையை எதிர்கொள்ள அரசாங்க அதிகாரிகளை அனுமதியேன்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரை

(கொழும்பு)


எந்தவொரு அரசாங்க அதிகாரியையும் சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு முகங்கொடுப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசாங்கம் முறையான விசாரணைகளை மேற்கொள்ளத் தவறினால் சர்வதேச விசாரணைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும் என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக் எச்சரித்திருந்தார். இந்நிலையில் தேசிய தொலைக்காட்சியில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய ஜனாதிபதி, தன்மீதும் அரசாங்கத்தின் மீதும் குற்றம் சுமத்தும் தனிநபர்களும் அமைப்புகளும் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிக்க (20ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

*Intake Get Register Now*
*Collecting the application until March 31st 2011*
*start the academic on August 2011*
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
*Administration & Documentation*
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2281)


# இந்துநெறி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இந்துமா மன்றத்தின் இந்துநெறி இதழ் வெளியீட்டு விழா நாளை திங்கட் கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பொதுளியல் துறை மண்டபத்தில் ஜெ.திருவரங்கன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினராக கலைப்பீடபீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)



**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சதயம் 1-ம் பாதம் 1977-ம் ஆண்டு பிறந்த B.B.A., MBA படித்து UK யில் Work Pemit-ல் வேலை செய்யும் 5' 8" உயரமுள்ள மணமகனிற்கு படித்த அழகிய மணமகள் தேவை. அத்துடன்,

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 1975-ல் பிறந்த 7-ல் செவ்வாய் உள்ள சிரகபாவம் 26 1/2 உடையதும் B.B.A(Hons) MSC படித்த அரச கணக்காளராக பதவி வகிக்கும் மணமகனிற்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:
0778446028, 0750422046
(4018)



**IDM** City Campus # 3
மாணவர்களினதும் தொழில்புரிவோர்களினதும் வேண்டுகோளுக்கமைய புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Foundation Programmes**
- Diploma in ICT
- Diploma in Business Management

**Higher Diploma Programmes**
- HND in Software Development
- HND in ICT System Support
- HND in Business Management

**School of Software Engineering**
- ASP.Net
- VB.Net
- C#.Net
- Java

**School of Multimedia Programmes**
- Certificate in Multimedia Web Applications
- Autocad
- Adobe Photoshop
- Corel Draw

**Administrative Studies**
- ICDL
- DICAP
- QuickBooks 2008
- Tally
- Web Designing

COURSE ADVANCEMENT
A Specialized Degree in IT
Semester 6 — B.Sc. (Hons) Specialized IT Degree
Semester 5 — Duration – 12 Months
Semester 4 / Semester 3 — Award: Higher National Diploma in Computing; Software Development | ICT System Support; Duration – 8 Months
edexcel
Semester 2 — Award: IDM Premier Diploma (Specialized in); Software Development | ICT System Support; Duration – 4 Months
edexcel
Semester 1 — Award: Edexcel Accredited IDM Diploma in ICT; Duration – 6 Months

*Batches Start On*
*14-03-2011 ,9.00am / 3.00pm*
*19-03-2011 ,9.00am / 3.00pm*
*21-03-2011 ,9.00am / 3.00pm*
*26-03-2011 ,9.00am / 3.00pm*

**IDM Affiliated Campus**
#216, Navalar Road, Jaffna. Tel: 0212229901



**மணமகள் தேவை**

யாழ்.உயர் இந்து வேளாளர் 1973-ல்பிறந்த 5'8" உயரமுடைய M.B.B.S.டாக்டர் மகனுக்குப் பொருத்தமான மருமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகளுக்கு: 0718473884
(3991)



**உடனடி வேலைவாய்ப்பு**

**Management Trainees**
**2011 / 2012**

கனடாவை தலைமை அலுவலகமாகக் கொண்டு சர்வதேச ரீதியில் கடந்த 30ஆண்டுகளாக இயங்கும் அதன் இலங்கையின் வடமாகாண புதிய கிளைகளுக்கு (யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி) முகாமைத்துவ பயிற்சிக்கு ஆட்கள் தேவை.
O/L, A/L சித்தியடைந்தவர்களும், தொழிலை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களும் தொடர்பு கொள்ளவும்.
0777274795
(4019)



**சித்தா மருத்துவம்**

வாதம், பாரிசவாதம், அழல்வாதம் நீரிழிவு-சிறுநீரக அழற்சி, சூதகவலி, பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதிஇரத்த அமுக்கம், மெலிவு, நெஞ்சுக்குத்து, நரம்புத்தளர்ச்சி, உடற்பருமன், சோரியாசிஸ், கிரந்தி, கரப்பன், கணை குளோகோமா, இளநரை, பொடுகு முதலான நோய்களுக்கு பேரறிஞர் Dr.k.பாலசுப்பிரமணியம் சிறப்பு ஆலோசகர் அவர்களை 14-ம், 15-ம், 16-ம் திகதிகளில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.
தொலைபேசி தொடர்புக்கு: 0777047371, 0757390195, 0771005971
Dr.k.சிவானந்தன்
ஆனந்தா வைத்திய நிலையம்,
காவல்துறை முன்பாக,
புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.
(4021)



**திறப்பு விழா**

**SM's COMPLEX**

**SM GUEST HOUSE, SM CAR SALES, SM STUDY ABROAD**

- A/C, NON A/C, Family Rooms, Double Rooms, Single Rooms, உணவு வகைகள் என்பன வாடிக்கையாளரின் தெரிவுக்கேற்ப நியாய விலையில்...
- வாகன விற்பனைக் காட்சியறை, பாவித்த தரமான வாகனங்கள், புதிய வாகனங்கள் (BRAND NEW VEHICLES) விற்பனையும் கொள்வனவும்.
- வெளிநாட்டில் உயர்கல்வி : UK, NEW ZEALAND,INDIA, CANADA, U.S.A etc.

மேற்படி சேவைகளைக் கொண்ட நிறுவனம் எதிர்வரும் 14-03-2011 நாளை வரும் சுபவேளையில் பி.ப. 12.23க்கு கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
824, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 5673818 , 0774528818



**SM's Consultants**

**UK உயர்கல்வி சம்பந்தமான இலவச கருத்தரங்கு**

VIEC (Viv's International Education Center) நிறுவனத்திலிருந்து திரு.சியாத் (MR.SEYAD) அவர்கள் UK-ல் உயர்கல்வி சம்பந்தமாக இலவச கருத்தரங்கு ஒன்றையும், Student Visaவுக்கு எப்படி விண்ணப்பிப்பது என்பதற்குரிய முழுமையான விபரத்தினையும் எமது புதிய அலுவலகமாகிய 824, ஆஸ்பத்திரி வீதியில் 15.03.2011 அன்று காலை 10.00 மணியிலிருந்து பி.ப. 4.00மணிவரை இலவசமாக வழங்க உள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
VIEC நிறுவனத்தினர் 60க்கு மேற்பட்ட UKகல்லூரிகளில் பிரதிநிதிகளாகத் திகழ்கிறார்கள்.
கருத்தரங்குக்குச் சமுகமளிக்கும்பொழுது தங்களது கல்வித் தகைமைகளையும் இதர தரவுகளையும் தவறாது கொண்டு வரவும்.
தொடர்பு: 021 5673818, 0774528818.
SM's Consulatants
824, Hospital Road,
Jaffna.
(4024)



**வீடு விற்பனைக்கு**

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் சந்தியில் Mpcs Union-க்கு அருகாமையில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவும் : 021 2255051
(3909)



**மணமகன், மணமகள் தேவை**

ஐரோப்பிய நாட்டில் குடியுரிமை உள்ள தொழில்புரியும் 73ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

கொழும்பில் தொழில்புரியும் 1970 ஆம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு : 0031629353283
Email:- kiruba71@gmail.Com
(3954)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## கனடா-நியூசிலாந்து மும்பையில் இன்று சந்திப்பு

(மும்பை)

உலகக்கிண்ண கிரிக்கெட்டில் இன்று நடக்கும் முதல் போட்டியில், நியூசிலாந்து, கனடா அணிகள் மோதுகின்றன.

நியூசிலாந்து அணி இதுவரை கென்யா, சிம்பாவே, பாகிஸ்தான் அணிகளை வீழ்த்தி 6 புள்ளிகள் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுடன் மட்டும் தோற்றது. இன்று தனது ஐந்தாவது போட்டியில் கனடாவை சந்திக்கிறது. இதில் வெற்றி பெற்றால், 8 புள்ளிகளுடன் காலிறுதிக்கு முன்னேறிய இரண்டாவது அணி என்ற பெருமை பெறலாம்.

இதற்காக, பிரண்டன் மக்குலம், குப்தில், உதவலாம். பாகிஸ்தானை நொறுக்கிய ரோஸ் ரெய்லர் இன்று மீண்டும் எழுச்சி காணலாம்.

பந்துவீச்சில் இதுவரை 10 விக்கெட் சாய்த்துள்ள முன்னணி வீரர் டிம் சௌத்தி, ஹமிஸ் பென்னட் (6) இருவரும், நல்ல பங்களிப்பை வழங்கி வருகின்றனர். தவிர, ஜேக்கப் ஓரம், மில்ஸும் நம்பிக்கை தருகின்றனர்.

### கனடா நம்பிக்கை

முதல் மூன்று போட்டிகளில் ஹட்ரிக் தோல்வியடைந்த கனடா அணி, கென்யாவுக்கு எதிரான வெற்றியால் உற்சாகம் அடைந்துள்ளது.

இன்றும், அடுத்து அவுஸ்திரேலியாவையும் வெல்லும் பட்சத்தில் அணியின் காலிறுதி வாய்ப்பு குறித்து யோசிக்கலாம். இதுஅவ்வளவு எளிதான செயல் அல்ல.

இதனால் அணித்தலைவர் ஆஷ்ஸ் பகாய், ஹன்ஸ்ரா, ரிஸ்வான் சீமா, சர்காரி ஆகியோர் துடுப்பாட்டத்தில் ஆறுதல் தந்து, மற்றொரு வெற்றியை பெற முயற்சிக்கலாம்.

பந்துவீச்சில் தமிழகத்தின் பாலாஜி ராவ், பெய்டுவான், ரிஸ்வான் சீமா ஆகியோர் நம்பிக்கை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## ஆஸி. அதிரடியை தாங்குமா கென்யா

(பெங்களூர்)

உலகக்கிண்ண கிரிக்கெட்டில் இன்று நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, கத்துக்குட்டி கென்யாவை சந்திக்கிறது. வலுவான அவுஸ்திரேலியாவின் தாக்குதலில், கென்ய அணி தவிடுபொடியாக உள்ளது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் தற்போது நடக்கிறது. இதன் "ஏ" பிரிவு லீக் போட்டியில் இன்று அவுஸ்திரேலியா, கென்யா அணிகள் மோதுகின்றன.

தொடர் ஆரம்பமாகும் முன் அவுஸ்திரேலிய அணி குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகின. துடுப்பாட்டம் பந்துவீச்சில் ஏமாற்றும் இந்த அணி உலகக்கிண்ணத்தை வெல்வது கடினம் என்று கணிக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக, அவுஸ்திரேலிய அணியின் உலகக்கிண்ணத் தொடரில் வெற்றி நடை தொடர்கிறது.

### வோட்சன் பலம்

துடுப்பாட்டத்தை பொறுத்தவரை வோட்சன் மட்டும் இதுவரை 141 ஓட்டங்கள் எடுத்துள்ளார். மற்ற வீரர்கள் ஹடின் (84), மைக்கெல் கிளார்க் (82) ஓரளவு பரவாயில்லை ரகத்தில் உள்ளனர். வையிட் (44) அணித்தலைவர் பொன்டிங் (40) ஆகியோரும் ஓட்டம் சேர்ப்பதில் திணறுகின்றனர்.

### பலமான கூட்டணி

அவுஸ்திரேலிய அணிக்கு பெரும் பலமே ஜோன்சன் (8 விக்), தையிட் (5 விக்), பிரெட் லீ (3 விக்) ஆகிய மூன்று வீரர்கள் அடங்கிய வேகப் பந்து வீச்சு கூட்டணி தான். சுழலுக்கு சாதகமான ஆடுகளங்களிலும் இந்த வீரர்களின் எழுச்சி, அணிக்கு வெற்றியை தேடித்தருகிறது என்றால் மிகையல்ல. இன்றும் பலவீனமான கென்யாவை உண்டு, இல்லை என்று செய்வது நிச்சயம். இதனால் அவுஸ்திரேலிய அணி இன்று தனது காலிறுதி வாய்ப்பை உறுதி செய்ய காத்திருக்கிறது.

### ஆறுதல்

உலகக்கிண்ண தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வீணாகபோன அணி உண்டு என்றால் அது கென்யாதான்.

முதன் முதலாக நியூசிலாந்துக்கு சுனாமியில் சிக்கிய கென்யா, அடுத்து பாகிஸ்தான், இலங்கை என வலிமையான புயலில் சீரழிந்தது. பின் கனடாவை வீழ்த்தும் என்று நினைத்துக்கொண்டிருக்க, அதிலும் மண் விழுந்தது. இதனால் உலகக் கிண்ண தொடரில் இருந்து வெளியேற நேரிட்டது.

### ஒட்டுமொத்த சொதப்பல்

இதற்கு துடுப்பாட்ட ஒட்டுமொத்தமாக படுத்துக்கொண்டது தான் காரணம். கொலின் ஒபுயா (144 ஓட்டங்கள்) தவிர, மிஸ்ரா, தோமஸ் ஒடாயோ, வோட்டர்ஸ் என யாரும் கை கொடுக்கவில்லை.

பந்துவீச்சில் ஒடியனோ, நெகேமையா, ஸ்டீவ் டிக்காலோ என நட்சத்திர வீரர்கள் அணியை பரிதாப நிலைக்குத் தள்ளி விட்டனர்.

இன்று ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் மட்டுமே, அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு சற்று தடை போட முடியும், அவ்வளவு தான். மற்றபடி ஆறுதல் வெற்றி கூட, கென்ய அணிக்கு கானல் நீர்தான்.

## சுவானுக்கு அபராதம்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான லீக் போட்டியில் நடுவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் சுவானுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் சிட்டகாங் நகரில், பங்களாதேஷ்-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண லீக் போட்டி நடந்தது.

இப்போட்டியின் 26வது ஓவரை இங்கிலாந்து சுழற்பந்துவீச்சாளர் சுவான் வீசினார். அப்போது பந்தில் குறைபாடு உள்ளதாக கருதிய சுவான் பந்தை மாற்றும்படி கள நடுவர் ஜெப் குரோவிடம் கூறினார். இதற்கு குரோவ் மறுப்பு தெரிவித்ததால், நடுவரை நோக்கி ஏதோ கூறியபடி அந்த ஓவரை வீசினார் சுவான்.

பின் சிறிது நேரம் கழித்து, நடுவர் குரோவிடம் நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இப்போட்டியில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

ஐ.சி.சி., 2.1.4 விதிமுறையின் படி, போட்டியின்போது தகாத, அருவருப்பான வார்த்தைகளை பயன்படுத்துவது குற்றமாகும். இதன்படி சுவானுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் போட்டிகளில் இது போல இவர் மீண்டும் நடந்து கொண்டால், 50 சதவீதம் அபராதம் அல்லது கடுமையான தண்டனை விதிக்கப்படும் என ஐ.சி.சி. எச்சரித்துள்ளது.


கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி



அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

1. ...................... 2. ......................
2. ...................... 4. ......................

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06, ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490



இன்றைய கேள்வி ?

நடந்த 1999இல் எந்த அணியை வீழ்த்தி அவுஸ்திரேலியா உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது?

..............................................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 14.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?......................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்......................................
முகவரி......................................
தொலைபேசி......................................
தே.அ.அ.இல......................................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
T.P.021 2221101, 021 2229644
email:- pcsjaffna@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிர்வு

## நடப்பு

வாழ்ந்தாலும் ஏசும். தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது தானடா..! பழைய சினிமாப் பாடலின் பல்லவி வரிகள் இவை.

ஆனால் உயர்வுநிலை அடையும் போது அவர்களை வாழ்த்துவது கட்டாய மரபாகிவிட்டது. அவர்கள் எந்தவொரு கட்டளையையும் பிறப் பிக்கும் போது முன்,பின் யோசிக் காமல் அவர்களுக்கு, இவர்கள் அதை நிறைவேற்றி வைப்பதும் இன்று சகசமாகி விட்டது. அவர்களில் தங்கியிருந்தால், தாம் கொஞ்சமாவது சாதித்து விடலாம் என்று எண்ணிக் கொள்ளும், சுயநல மனிதர்கள் இவர்கள்.

பணம், பொருளாதாரத்தால் மேம்பட்டவர்களைத்தான் அவர்கள் என்று குறிப்பிடுகின்றேன். அவர்களுக்கு பணிவிடை செய்பவர்களைத்தான் இவர்கள் என்று குறிப் பிடுகின்றேன்.

பணம், பொருளாதாரம் நிலையற்றது. செல்வந்தர்களுக்கு மாறாத கடும் நோய் தொற்றிவிட்டால் அல்லது கடும் மழை, புயல் காற்று, சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களால் பணமும் வற்றிவிடும். பொருளாதாரம் மெலிந்துவிடும். அதுவரை உண்ணிபோல் அவர்களோடு ஒட்டி வாழ்ந்த வர்களெல்லாம் திக்குத்திக்காக பிரிந்து சென்று விடுவார்கள்.

### படித்தோ, பார்த்தோ தான் ரசித்ததை பகிர்ந்து கொள்கிறார் படைப்பாளி

"அவர்கள் விழுந்தால்கூட, இவர்கள் யார், எவர்கள்" என்று கேட்கமாட்டார்கள்.

உயர்ந்தபோது அவர்களில் சாய்ந்து கொண்டவர்கள், அவர்கள் தாழ்ந்தபோது பாய்ந்து சென்று விடுவார்கள். இங்கே காசி ஆனந்தனின் கதையைப்படியுங்கள்.

சீனா. உதயகுமார்
சமரபாகு, வல்வெட்டித்துறை

சேவல் கூவியது.

"நான் எழும் போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது" என்று கதிரவன் பூரித்துப் போனான்.

மாலை வந்தது.

கதிரவன் மேற்குத் திசையில் மூலையில் கவிழ்ந்தான்.

சாயும் போது-

"நான் விழுகிறேன்... என்னைத் தாங்க யாரும் வரமாட்டார்களா..." என்று ஏங்கினான்.

சேவலை அவன் எதிர்பார்த்தான். வரவில்லை.

விழுந்து கொண்டே கதிரவன் சொன்னான்.

"எழும்போது தாங்க வருகிறவனெல்லாம்

விழும்போது தாங்கவருவதில்லை."

இக்கதைமூலம் 'நடப்பு' பற்றி நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது அல்லவா?

*(வளரும்)*

# தொழில் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் மனித வள அமைப்பு ஐடிஎம் சிற்றி கம்பஸ் உடன் இணைந்து நடத்தும் இலவச தொழில் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர்களாலும், பட்டதாரிகள் மனித வள அமைப்பின் வளவாளர்களாலும் நடாத்தப்படவுள்ள மேற்படி பயிற்சிப்பட்டறையில் வேலையற்ற பட்டதாரிகள், டிப்ளோமா மற்றும் உயர் தரம் கற்றுவிட்டு வேலையின்றி இருக்கும் தொழில் முனைவோர் ஆகியோர் கலந்து கொள்ள முடியும்.

இதற்கான பதிவுகளை எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன் 07707 63688 எனும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-9)

# 29 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன்வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 29 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் சீனியர் ஒழுங்கையிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் தலைவர் வீ.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கட்டட நிர்மாண முகாமையாளர் உத்திரலிங்கம், கைதடி நவில் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன், நல்லூர் கிராம சேவையாளர் மு.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# வெளிவாரிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கலைமாணி பகுதி II - 2006, 2007 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 362 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் க.சிவராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் நாளை திங்கட்கிழமை முதல் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தமது பரீட்சைப் பெறுபேறுகளை பார்வையிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீள் பரீட்சார்த்திகள் அன்றைய தினமே பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-6)

# நவீன முறையில் பதநீர் உற்பத்தி; பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவும் இலங்கைத் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து பத நீரை நவீன முறையில் தயாரித்து நீண்ட காலத்திற்கு பாதுகாத்து வைப்பதற்கு உரிய ஆராய்ச்சி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சிந்தனையின் அடிப்படையில் தொழிற்சாலை ரீதியில் தரமான பதநீரை உற்பத்தி செய்து இதற்கு சிறந்த சந்தை வாய்ப்பை உள்நாட்டில், வெளிநாட்டில் ஏற்படுத்துவதன் மூலம் பனை வளத்தை சார்ந்து வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

மேலும் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைவதனூடாக மக்களுக்கு மகிழ்வையும் ஆரோக்கியத்தையும் ஏற்படுத்தும் பதநீரை சிறந்த முறையில் உற்பத்தி செய்வதன் மூலம் நல்லதொரு பொருளாதார வளமுள்ள நாட்டை உருவாக்க முடியும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# இராசி பலன்

13.03.2011
மாசி 29, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
அட்டமி பிற்பகல் 12.28 மணிவரை
மிருக சீரிடம் பிற்பகல் 4.37 மணிவரை
இராகுகாலம் 4.52-6.22 மணிவரை
சுபநேரம் 9.22-10.52 மணிவரை
அட்டமி-நவமி
முதலாம் தவக்கால ஞாயிறு.

**மேடம்** உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவங்கள் நடைபெறலாம், சவால்களை சமாளிக்கும் நாள், தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

**இடபம்** உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் நாள், வருமானம் திருப்தி தரும், வாதத்திறமையால் வெற்றி காண்பீர்கள், பெருமையடையும் நாள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** இடமாற்றம், ஊர்மாற்றம் செல்லும் எண்ணம் மேலோங்கும், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், தேவையற்ற மனச்சஞ்சலம் தோன்றி மறையும்.

**சிங்கம்** இனிமையான நாள், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள், உறவினர் வருகையுண்டு.

**கன்னி** காலை நேரத்திலேயே சுப செய்திகள் வந்து சேரும், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், புதிய திட்டங்கள் வெற்றிதரும், ஆரோக்கியத்தில் தெளிவுபிறக்கும் நாள், பயனாளிகளால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதால் மகிழ்ச்சி குறையாதிருக்கும்,எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பல நாட்களாக நினைத்த காரியமொன்று நிறை வேறலாம்,போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு அமையலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், உங்களின் கருத்துக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும்,போட்டிகள் சாதகமாக அமையும்.

**கும்பம்** பூர்வீகச் சொத்துக்களால் பலன் கிடைக்கும்,உஷ்ண நிலையான நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, சந்தித்தவர்களால் நன்மையடையும் நாள்.

**மீனம்** உடன்பிறப்புக்களால் உற்சாகம் பெருகும் நாள், அடுத்தவர் நலனில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, போசன சுகமுண்டு.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 | 65-80 |
| பச்சைமிளகாய் | 180 | 240 | 250 | 200 |
| தக்காளி | 130 | 160 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 110 | 90 | 110 | 80 |
| கரட் | 150 | 180 | 200 | 140 |
| பூசணி | 60 | 70 | 80 | 70 |
| புடோல் | 70 | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 100 | 70-90 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 90 | 60-80 |
| பாகற்காய் | 130 | 150 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 200 | 140 |
| கரணைக்கிழங்கு | -- | 70 | 120 | -- |
| பயிற்றங்காய் | 180 | 180 | 180 | 160 |
| லீக்ஸ் | 110 | 140 | 180 | -- |
| பீற்றூட் | 70 | 60 | 100 | 60 |
| கறிமிளகாய் | 200 | 170 | 200 | 170 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 400-600 |
| போஞ்சி | 140 | 130 | 160 | 140 |
| கத்தரி தம்புள்ள | 150 | 130 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 30-60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிக்கற்களின் இரகசியம்


Ruby
Pearl
Topaz
Hessonite

மனிதனின் அதிர்ஷ்டத்தை இரத்தினங்கள் பெருக்கும் வல்லமை படைத்தவை. மேலும் மனிதனுக்கு உள்ள கிரகத்தின் சக்தி குறைபாட்டையும் இரத்தினங்கள் தீர்க்க முடியும். ஜாதகம் என்பது மனிதனின் விதியின் பாதையை நிச்சயமாகக் காட்டும் ஒரு கலங்கரை விளக்கம். எனவே இரத் தினங்களைப் பற்றியும் அதன் நன்மை, தீமைகளையும் அறி ந்து கொள்வது அவசியம்.

தற்காலத்தில் இரத்தி னங்களைதேர்ந்தெ டுத்து அணிய எண் கணித்தை பயன்ப டுத்துகிறோம். ஜாதக ரீதியாக வும் எண் கணித ரீதியிலும் சீர் தூக்கிப் பார் த்து இரத்தின ங்களை அணி ந்து கொண் டால் மட்டுமே அவற்றின் மூலம் நல்ல அதிர்ஷ்டங்க ளை நிச்சயம் அடைய முடி யும்.

எண் கணி தம்மூலம் மட் டும் தேர்வு செய்து ஒரு நவரத்தினத் தைஅணியும்போது அந்த நவரத்தினம் ஜாதக ரீதியாக தீமை யை உண்டு செய்யக் கூடிய கிரகத்தைச் சேர்ந் ததாக இருந்தால் அந்த நவரத்தினம் நன்மையை செய்வதற்கு வழியின்றி தீமையையே கொடுக்கும். எனவே நவரத்தி னங்களை அணியும் முன்பு அதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரத்தினக்கற்கள் என்றால் இயற்கையில் உருவாகும் தாதுப் பொருட்களின் அற்புத இணைப்பாகும். அனைத்து இரத்தினங்களும் Gems அல்லது Lucky Stars என அழைக்கப்படுகின்றன. இரத்தினங்கள் அனைத்தும் மனித னின் முயற்சியின்றி இயற்கையாகத்தான் உருவாக வேண்டும் என்பது இன்றியமையாதது. நவரத்தினங்களை Precious Stones எனவும் சொல்லலாம்.

இரத்தினங்களின் அமைப்பில் அதன் நிறம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒவ்வொரு இரத்தி னத்திற்கும் ஒரு இயற்கை நிறம் உள்ளது. இரத்தினங்களின் இரசாயன சேர்க்கை அமைப்புப் படியேதான்தான் செயற்கை இரத்தினங்களும் தயாரிக்கப்படுகின்றன. இரத்தினங்களை எடைபோட கரட், சென்ட் போன்ற அளவு முறைகளை பயன்படுத்துகிறார்கள்.

1 கரட் = 200 மில்லி கிராம்

2 மில்லி கிராம் =1 சென்ட்

மாணிக்கம், முத்து, புஷ்பராகம், கோமேதகம், மரகதம், வைரம், வைடூரியம், நீலக்கல், பவளம் என இரத் தினக்கற்கள் பல உண்டு. இவை ஒவ்வொன் றும் நிறத்தையும், குணாதிசயங் களையும் கொண்டவை.

**மாணிக்கம் (Ruby)**

இது நவரத்தினங்களில் ஒன்று. சூரியன் கிரகத்திற்கு பிரதிநிதியாக உள்ளது. இது மிகவும் விலை உயர்ந்தது. செம்பு நிறம் கொண்டது.

**யாருக்கு பயனளிக்கும்?**

மாணிக்கத்திற்கு பதிலாக கார்னட்டை (Garnet) யும், நட்சத்திர மாணிக் கம் என் னும் Star Ruby கற்களை யும், சூரிய காந் தக்கல் எனும் Sun Stone போன்ற உப இரத்தினங்க ளை அணி ந்து சூரியக் கிரகத்தின் குறைக ளைப் போ க்கி அதிர்ஷ் டமடைய லாம். சிம்ம லக்னம், சிம்ம ராசி யில் பிறந்த வர்கள், சூரி யனின் நட் சத்திரத்தில் பிறந்தவர்கள், 1,10,19,28 ஆம் திகதிகளில் பிறந்த வர்கள், பிறந்த நாள் கூட்டு எண்1 ஆக வரும் நண்பர்களும் இதனை அணிந்து நன் மை அடையலாம்.

**முத்து (Pearl)**

இது கடலில் விளையும் நவரத் தினமாகும். சந்திரக் கிரகத்தின் தன் மைகளைக் கொடுக்கும். சிவப்பு. மஞ்சள் மற்றும் கறுப்பு நிறங்களிலும் காணப்படும்.

**யாருக்கு பயனளிக்கும்?**

நல்ல தரமான கனமான சந்திர பிம்பம் போன்று வெண்மை நிறம் கொண்ட முத்துகளை அணிந்தால் எல்லாவித பாவங்களும் நீங்கும். ஆயுள் அதிகமாகும். முத்துக்கு பதிலாக (Moon Stone) பச்சை நிறமுள்ள ஓப்பல் கற்களை அணியலாம். சந்திர கிரகத்தின் பலம் குறைந்தவர்கள், கடக ராசி, கடக லக்கினத்தில் பிறந்தவர்கள் 2,11,20,29 ஆகிய திகதிகளில் பிந்தவர்கள், பிறந்த திகதி கூட்டு எண் 2ஆக கொண்டவர்கள் முத்தையும் அதன் உபரத்தினத்தையும் அணியலாம்.

புஷ்பராகம், கோமேதகம் மரகதம், வைரம், வைடூரியம், நீலக்கல், பவளம் ஆகிய இராசிக் கற்களின் தன்மையைப் பற்றியும், யார் இதை அணிந்தால் நன்மை பெறுவார்கள் என்பதையும் பார்ப்போம்.

(தொடரும்)

*ஜோதிட சக்கரவர்த்தி சுபாஷ்*


Emerald
Diamond
Cat Eye
Blue Sap-phire
Coral

Enlighten Your Career
முதன் முதலாக யாழ்மண்ணில்
சர்வதேச பல்கலைக்கழகங்களினூடான
பொறியியல்மானி, விஞ்ஞானமானிக்கற்கைநெறிகள்
BEng. From Unversity of Wolverhampton UK
BSc. International Transportation Management and Logistics
From Dalian Maritime University (DMU)
Call Now : 011 4 486 486 / 0214 925 925
CINEC
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS
KKS Road, Maruthanarmadam, Jaffna.
ADInnovations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகம்பத்தினால் ஜப்பானின் பிரதானதீவு அதன் அச்சிலிருந்து 8அடி தூரம் நகர்வு



ஜப்பானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தினால் ஜப்பானின் பிரதான தீவு அதன் அச்சில் 8 அடி (2.4 மீற்றர்) தூரம் நகர்த்தப்பட்டுள்ளதாக அமெரிக்க பூகோள வியல் அளவையியல் திணைக்களத்தைச் சேர்ந்த பூகற்பவியலாளர் கென்னத் ஹுட்னட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தாலியிலுள்ள பூகோள பௌதிகவியல் மற்றும் எரி மலையியல் தேசிய நிறுவ கத்தின் தகவல்களின்படி நேற்று முன்தினம் ஏற்பட்ட 8.9 ரிக்டர் அளவிலான பூகம்பத்தினால்பூமி அதன் அச்சில் சுமார் 4 அங்குலம் (10 சென்ரிமீற்றர்) நகர்ந்துள்ளது.

ஜப்பானின் கிழக்குக் கரையோரத்திற்கு அண்மையில் ஏற்பட்ட இப்பூகம்பத்தினாலும் அதன் விளைவான சுனாமியினாலும் சுமார் ஆயிரம் பேர் பலியாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

30 அடி உயரமான சுனாமி அலை வீசிய தால் ஜப்பானின் பல நகரங்களில் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பசுபிக் சமுத்திரத்தின் கீழுள்ள புவித் தட்டில் 400 கிலோ மீற்றர் நீளமும் 160 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட பகுதியில் பிளவு முறிவு ஏற்பட்டதால் இப்பூகம்பம் நிகழ்ந்தது.

இதனால் மேற்படி புவித்தட்டுப் பகுதி 18 மீற்றர்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 140 வருடங்களில் ஜப்பானில் ஏற்பட்ட பாரிய பூகம்பம் இது வாகும்.

வலிமையைப் பொறுத்தவரை கடந்த 2004 ஆம் ஆண்டு சுமார் இரண்டரை இலட் சம் பேர் இறப்பதற்குக் காரணமான இந்தோனேஷியாவின் ஆச்சே பிராந்தியத்தில் ஏற்பட்ட பூகம்பத்திற்கு நேற்று முன்தினம் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பமும் ஏறத்தாழ சமனானது எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி இந்தோனேஷிய பூகம்பம் 9.1 ரிக்டர் அளவுடையதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

கிளி/ பூநகரி நல்லூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி எஸ். பரமேஸ்வரன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் எஸ். தருமரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி உதவி அரசாங்க அதிபர் கே.எஸ். வசந்தகுமார், கிளி. வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. பிரதாப்சிங் விஸ்ணு, கட்டளை அதிகாரி கேணல் குணவர்த்தனா, பூநகரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மனோரணகலா, பூநகரி வைத்திய அதிகாரி சண்டிகாபஸ்நாயக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-84)

# அணு உலைகள் பாதிப்பால் கதிர்வீச்சு அபாயம்

## ஜப்பானில் அவசரநிலை பிரகடனம்

ஜப்பான் பூகம்பம், சுனாமியால் அணு உலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள புகுசிமா மாவட்டத்தில் 5 இடங்களில் அணு உலைகள் இருந்தன.இந்த 5 அணு உலை களுமே பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு அணு உலையில் அதிகளவில் கடல் நீர் புகுந்து விட்டது.

இதனால் அணு உலை குளிர்ப்படுத்தும் அமைப்பு முற்றிலும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. அதில் இருந்து அணுக்கதிர்வீச்சு கசிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது.

எனவே, அந்தப் பகுதியில் 10 கிலோ மீற்றர் சுற்றளவில் வசிக்கும் 3 ஆயிரம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

அதேபோல மற்ற அணு உலைகளிலும் கசிவுஏற்படலாம் எனக் கருதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தப் பகுதியில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அணுக்கதிர்வீச்சு ஏற்பட்டால் அதை சமாளிக்கும் வகையில் முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. 5 அணு உலைகளிலும் மின்சார உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஜப்பானில் பெரியளவில் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# ஜப்பானில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஜனாதிபதி அனுதாபம்

ஜப்பானில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சி மற்றும் ஆழிப்பேரலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் குனியோ டகஹஷியுடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி தமது கவலையை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் ஜப்பான் மீள வழமை நிலைக்கு திரும்புவதற்காகவும் பிரார்த்திப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த அனர்த்தங்களால் ஜப்பானிலுள்ள இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து இதுவரை பதிவாக வில்லையென வெளிவிவகார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இது தொடர்பாக அந்த நாட்டிலுள்ள இலங்கை தூதரகம் தொடர்ந்தும் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் ஜப்பானிலுள்ள இலங்கையர்கள் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு விசேட கருமபீடம் ஒன்றை நிறுவியுள்ளது. (ஸ்ரீ-2)

# கைக்குண்டுகளுடன் இருவர் கைதாகினர்

(கொழும்பு)

கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்கொழும்பு- கொழும்பு வீதியில் கார் ஒன்றினை சோதனையிட்ட பொலிஸார் இரண்டு கைக்குண்டுகளுடன் இருவரை கைது செய்துள்ளனர்.

கந்தானை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த காரை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது மிகவும் சூட்சுமமான முறையில் கைக்குண்டுகள் கைக்குண்டுகள் இரண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரின் சாரதியையும் அதில் பயணித்த நபர் ஒருவரையுமே பொலிஸார் இவ்வாறு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் ஜா எல மற்றும் ஆடியம்பலம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்ள தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அனுமதி

இந்தியாவின் தமிழ் நாட்டு மீனவர்களுக்கு கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்து கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அந்தோனியார் திருவிழா நடைபெறும் தினமான எதிர்வரும் 20 ஆம் திகதி காலை இலங்கை வந்து அன்றைய தினமே நாடு திரும்பிவிட வேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே 1974 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் படி தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 1983 ஆம் ஆண்டிற்கு பின்னர் யுத்தம் காரணமாக யாழ். மீனவர்களும் இந்திய தமிழ் நாட்டு மீனவர்களும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் கடந்த வருடம் இவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிக்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலவச சிங்கள வகுப்புகள்

(பூநகரி)

மாணவர்களினதும் வளர்ந்தோரினதும் தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் 66 ஆம் பிரிவுக் கட்டளைத் தளபதி அனுசரணையுடன் சனி, ஞாயிறு தினங்களில் பூநகரி நகர்ப் பகுதியில் சிங்கள மொழி வகுப்பை இலவசமாக நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூநகரி இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள தனியார் வீடொன்றில் அடுத்த வாரத்திலிருந்து இவ் வகுப்புகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-84)

# இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க ஒன்றிணையுமாறு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு ஒன்றிணையுமாறு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய கிழக்கு நாடுகளைக் கேட்டுள்ளார்.

தற்பொழுது மத்திய கிழக்குக்கு விஜயம் செய்துள்ள இவர் குவைத் தேசிய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுற்றுலா, நிர்மாணத் துறை ஆகியவற்றில் கூடுதலான முதலீட்டு வாய்ப்புக்கள் உருவாகி இருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மின்உற்பத்தி, காரியசக்தியிலான மின்சார உற்பத்தி ஆகிய துறைகளில் முதலீடு செய்யுமாறு மத்திய கிழக்கு நாடுகளை அவர் கேட்டுள்ளார்.

இலங்கையில் இடைவிடாத அபிவிருத்தியை எவராலும் தடுக்க முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-9)

# வடமேற்கு கடற் பகுதியில் எண்ணெய் அகழ்வாராய்ச்சி

## யூன் மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் வடமேற்கு கடற்பிரதேசத்தில் எதிர்வரும் யூன் மாதம் அளவில் கனிய எண்ணெய் மற்றும் இயற்கைவாயு அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ளமுடியும் என இந்திய மற்றும் பிரிட்டிஷ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய தொழில்நுட்பத்துடன் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் கனிய எண்ணெய் அகழ்வுப் பணியை சீராக மேற்கொள்ள முடியும் என இந்த நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது.

இது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் உந்துசக்தியாக அமையும் என வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கம் புலி திரை விமர்சனம்

இரட்டையர்களான சிவாவும், அசோக்கும் எலியும், பூனையுமாக இருப்பவர்கள் (ஜீவா இரட்டை வேடம்) அசோக் பெண்பித்தர். தான்சந்தோஷமாக இருக்க எதையும் செய்யக்கூடியவர். சிவா முன்கோபியாக இருந்தாலும் நல்லவர், நேர்மையாக வாழநினைப்பவர். அசோக்கின் காதல் வலையில் விழுந்து தன்னையிழக்கும் சவுந்தர்யா, தற்கொலை செய்கிறார். தம்பி என்றும் பாராமல் சிவா, அவரை சட்டத்தின் முன் நிறுத்துகிறார். தப்பிக்கிறார் அசோக். அண்ணன் தம்பி பகை வளர்கிறது. தம்பியை சட்டப்படி தண்டிக்க அண்ணனும், அண்ணனை தாதாக்களை வைத்து போட்டுத்தள்ள தம்பியும் போராடுகிறார்கள். இறுதிவெற்றி யாருக்கு என்பது கிளைமாக்ஸ்.



தோற்றத்தில் பெரிய மாற்றம் இல்லாமல் இரட்டையர் கரக்டரை அற்புதமாகச் செய்திருக்கிறார் ஜீவா. பெண்பித்தராக வரும் அசோக், "கட்டிக்கிட்டா இவளத் தாண்டா கட்டிக்கணும்" என்று அடிக்கடி பஞ்ச் டயலொக் விடுகிறார். வெளியில் இனிப்பாக பேசிக்கொண்ட சத்தம் அவரடிக்கும் வில்லத்தனமான நடவடிக்கைகளும் அதிரவைக்கிறது. அண்ணண் சிவா விசுக்கென்று கோபம் கொள்வதும் அந்தக்கோபத்தில் அன்பை மறைத்துவைத்து வெடிப்பதும் ஜீவாவின் நடிப்பு முத்திரை.

ஹிரோயின்களில் திவ்யாவிற்கு அதிகவாய்ப்பு. ஐ.டியில் வேலைசெய்யும் திவ்யா, மீன் வியாபாரம் செய்யும் சிவாவை காதலிப்பது புதியது. ஆனால் அதற்கு அவர் சொல்லும் பிளாஷ்பேக் காரணம் பழையது. இன்னொரு நாயகி சவுந்தர்யாவுக்கு அதிக வேலையில்லை. அசோக்கை காதலித்து, கர்ப்பமாகி செத்துப்போவதுதான் அவரது வேலை. தான்வேலை பார்க்கும் ஷோ ரூமில் ஜீவா மேல் எரிந்துவிழும் அவர், மறுநாளே கோவில் குளக்கரைக்கு வரச்சொல்லி காதல் வசனம் பேசுவதும், படுக்கையில் விழுவதும் எப்படி என்றுதான் புரியவில்லை.

சங்குநாதம் சினிமா வசந்தம்

சிங்கம், புலியாக ஜீவா கர்ஜித்து திரிந்தாலும் இருவரையும் சமாளித்து படத்திற்கு பலமாக இருப்பது சந்தானம். விதவிதமான கெட் அப்புகளில் அவர் செய்யும் அலப்பறையில் சிரிப்பு அலைகள். மணிசர்மாவின் இசையில் பாடல்கள் இனிமையாக இருக்கிறது. பாலசுப்பிரமணியத்தின் ஒளிப்பதிவு கச்சிதம். இரட்டையர்களின் கதை களம் புதியது என்றாலும் அதே ஆள்மாறாட்டம், தொப்பி அடையாளம் என்று பழைய பாணியும் எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது. சில காட்சிகளில் அசோக்கா, சிவாவா என்ற குழப்பமும் ஏற்படுகிறது. அண்ணன் சிவா நல்லதைச்சொல்லி, நல்ல படியாக நடந்தபோதும் அப்பா பொன்வண்ணனும், அம்மா குயிலியும் அவரை வில்லனாகவே பார்ப்பதில் லொஜிக் இல்லை. படத்தின் நீளத்திற்கு கொஞ்சம் கத்தரி போட்டிருந்தால் விறுவிறுப்பு கூடியிருக்கும். மொத்தத்தில் சிங்கம் புலி சுமாரான படம்.



## நண்பனுக்காக பட்டினி கிடக்கும் ஸ்ரீகாந்த்!

நண்பன் படத்துக்காக ஒரு நாளைக்கு ஒருவேளை அல்லது இரண்டு வேளை மட்டுமே சாப்பிட்டு களைப்பில் இருக்கிறார் நடிகர் ஸ்ரீகாந்த். டைரக்டர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வரும் 3 இடியட்ஸ் படத்தின் ரீ-மேக்கான நண்பன் படத்தில் நடிகர்கள் விஜய், ஸ்ரீகாந்த், ஜீவா, எஸ்.ஜே.சூர்யா, ராகவா லோரன்ஸ் என பெரும் நட்சத்திரபட்டாளமே இடம்பெறுகிறார்கள். இவர்களில் ஸ்ரீகாந்தின் வேடம் கல்லூரி மாணவன் வேடமாம். இதற்காக உடலை குறைத்து, மாணவன் தோற்றத்துக்கு மாற வேண்டும் என்று டைரக்டர் ஷங்கர், ஸ்ரீகாந்துக்கு கட்டளையிட்டிருக்கிறார்.



இதையடுத்து தற்போது நாளொன்றுக்கு ஒரு வேளை அல்லது இரண்டு வேளை மட்டுமே சாப்பிட்டு களைப்பில் இருக்கிறார் ஸ்ரீகாந்த். சாப்பிடாமல் பட்டினி கிடப்பதற்கு கைமேல் பலன் கிடைத்திருப்பதாக கூறும் ஸ்ரீகாந்த், சினிமாதான் என் வாழ்க்கை என்றாகி விட்டது. அதற்காக ஒரு வேளை சாப்பிடாமல் பட்டினி கிடந்தால் தவறில்லை. படம் நன்றாக வர வேண்டும். ஸ்ரீகாந்த் நன்றாக நடித்திருக்கிறான் என்று ரசிகர்கள் சொல்ல வேண்டும். அதற்காக எதுவும் செய்ய தயாராக இருப்பதுதான் ஒரு நடிகனுக்கு அழகு. அதைத்தான் நானும் செய்து கொண்டிருக்கிறேன், என்கிறார்.

## விக்ரமன் இயக்கும் இளசுகளின் கதை

புது வசந்தம், பூவே உனக்காக, உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன், சூரியவம்சம், உன்னை நினைத்து, வானத்தைப்போல போன்ற வெற்றிப் படங்களை இயக்கியுள்ளார் விக்ரமன். விஜயகாந்த் நடிப்பில் இவர் கடைசியாக இயக்கிய மரியாதை படத்தின் தோல்வியை அடுத்து, அடுத்த படத்தைப் பற்றி முடிவு செய்யாமல் இருந்தார்.

இவர் இப்போது தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் பிரம்மாண்டமான ஒரு படத்தை இயக்க இருக்கிறார். இளமை நாட்கள் என்ற இப்படத்தில் முற்றிலும் புதுமுகங்கள் நடிக்கிறார்கள். பிளஸ் 2 மாணவர்கள் பற்றிய கதையம்சத்தை மையமாகக் கொண்டு, அவர்கள் பருவத்தில் ஏற்படும் நட்பு, காதல், மோதல்



ஆகியவற்றை யதார்த்தமாக சித்தரிக்கும் படமாக இது இருக்கும் என்று சொல்கிறார் விக்ரமன்.

பல முன்னணி இசையமைப்பாளர்களிடம் கீ-போர்ட் பிளேயராக இருந்த பால்ராஜ் என்பவர் இதில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். ஏப்பிரல் மாத இறுதியில் இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகி படமாக்கப்படுகிறது.

## கொலைகாரன் வேடத்தில் கமல்



கமலின் அடுத்த படத்தை செல்வராகவன் இயக்குகிறார். இப்படத்தின் கதை விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இப்படம் ஹனிபல் என்ற ஆங்கிலப் படத்தின் தழுவல் தான் என்றும் சொல்லப்படுகின்றது. இதில் கமல்ஹசன் ஒருதொடர் கொலை காரராக நடிக்கிறார் என்றும் அவரது மனைவியாக பாலிவூட் நடிகை சோனாக்ஷி சின்ஹா நடிக்கிறார் என்றும் தகவல் கிடைத்துள்ளது.



நடிகை சோனாக்ஷி சின்ஹா பிரபல கிந்தி நடிகர் சத்ருஹன் சின்ஹாவின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. கமல்ஹசனுடன் நடிப்பதை பெருமையாக நினைக்கும் அவர், ஏக் துஜே கேலியே படத்திற்கு நான் என்றும் ரசிகை. அதுமட்டும் இல்லாது ஹேராம், ஹிந்துஸ்தானி, போன்ற படங்களில் கமல் நடிப்பைக் கண்டு வியந்திருக்கிறேன்.

இந்திய சினிமாவின் முக்கிய நட்சத்திரமான கமலுடன் நடிப்பதில் எனக்கு பெரும்மகிழ்ச்சி என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் லண்டனில் ஆரம்பமாக இருக்கிறது. முதல் முறையாக கமல் படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

## 04 சிறுவர்களில் காசநோய்

### சிறுவர்களில் காச நோய் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

சிறுவர்களில் காசநோய் தொற்றலினை அறியப் பல அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. குழந்தைகளில் தொடர்ச்சியாகக் காணப்படும் காய்ச்சல், இருமலின் காலம், போசணை நிலை, குடும்பத்தில் காசநோய் உள்ளமை என்பன கருத்தில் எடுக்கப்படும். மேலும் காசநோய்க்கான தோல் சோதனை நிணநீர்க் கணுவீக்கம் என்பன கருத்தில் எடுக்கப்படும்.

பிறந்த உடன் போடும் பி.சி.ஜி. தடுப்பு ஊசியினால் மூளைக்காசம் போன்ற நோய்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும். பி.சி.ஜி. தழும்பு பிள்ளைகளில் ஏற்படாவிடின் 6 மாதம் தொடக்கம் 5 வயது வரையான பிள்ளைகளுக்கு மீளவும் பி.சி.ஜி. தடுப்பு மருந்து ஏற்றல் அவசியம்.

தகுந்த முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் காசநோயைக் குணமாக்கலாம்.

சிறுவர்களுக்கான காசநோய்த்தடுப்பு மருந்துகள்

(RHZ) -றைபம் பிசீன் 60mg
-ஐசோநியேசைட் 30mg
-பிரசினமைட் 150mg

(RH)- றையம்பிசீன் 60mg
-ஐசோநியசைட் 30mg

கொடுக்கப்படும் அளவு

| குழந்தையின் நிறை (கிலோகிராம்) | முதல் 2 மாதங்கள் குளிசை (RHY) | அடுத்த 4 மாதங்கள் குளிசை (RH) |
|---|---|---|
| 2.5-5 | 1/2 | 1/2 |
| 5-7.5 | 1 | 1 |
| 7.5-10 | 1 1/2 | 1 1/2 |
| 10-15 | 2 | 2 |

குழந்தைகளின் ஒவ்வொரு கிலோ நிறைக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் காசநோய் மருந்துகளின் அளவு

1. ஐசோநியட் 5mg
2 சீறைபம்பிசீன் 10mg
3. பிரசின்மைட் 30mg
4. ஸ்ரேமைசின் 20mg

**குழந்தைகளில் காசம் வராது தடுப்பது எப்படி?**

✦ காசநோயாளியின் அரவணைப்பில் உள்ள குழந்தை மற்றும் போசணை குறைந்த குழந்தைகளில் காசநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கும். இவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

✦ குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்திற்குள் (BCG) பீ.சீ.ஜீ. காசநோய்த் தடுப்பூசி பெற்றுக் கொள்ளுங்கள். வீட்டில் பிறந்த குழந்தையாயின் உடனடியாக மருத்துவ மாதுவை நாடி ஊசி ஏற்றிக் கொள்ள வேண்டும். குழந்தைகளில் காசம் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது.

✦ இடதுகையில் 6 மாதங்களின் பின்பும் தழும்பு ஏற்படாத குழந்தைகளுக்கு 5 வயது வரை மீள ஊசியேற்றலாம். இவ்வாறு மீள ஊசி ஏற்றுவதன் மூலம் உங்கள் மழலைகளைக் காத்துக் கொள்ள முடியும்.

✦ காசநோய்த் தடுப்பூசி முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும்.

சிறுவர்களில் காசநோய்த் தொற்று நெருங்கிய உறவினர்களில் சளியில் கிருமி உடைய காசநோய் ஏற்படும் போது ஏற்படுகின்றது. எனவே, ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் பெற்றோர், சகோதரர்கள் மற்றும் வீட்டில் உள்ள உறவினர்களில் காசநோய் ஏற்படும் போது, குழந்தைகளிற்கும் காசநோய் ஏற்பட்டு உள்ளதா எனப் பரீட்சித்து அவ்வாறு ஏற்படாவிடத்து ஐசோநியசிட் மருந்தினை தடுப்பு மருந்தாக 6 மாதங்களில் அளிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் சிபாரிசு செய்துள்ளது.

(தொடரும்)



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

# சந்திரன் பூமியை நெருங்கி வருவதால் மிகப் பெரியளவில் பேரழிவுகள் ஏற்படும்

## வானியல் நிபுணர்கள் எச்சரிக்கை

ஜப்பானை நேற்று முன்தினம் மிகப் பெரிய நிலநடுக்கமும் கடல் கோளும் தாக்கியுள்ள நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி பூமிக்கு மிக அருகே சந்திரன் நெருங்கி வருவதால் மிகப்பெரிய அளவில் பேரழிவுகள் ஏற்படும் என வானியல் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி சந்திரன் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பூமிக்கு மிக அருகில் வருகிறது. அன்றைய தினம் பூமிக்கு 2 இலட்சத்து 21 ஆயிரத்து 556 மைல் தூரத்தில் சந்திரன் நெருங்கி வரும். இதை சூப்பர் மூன் நிகழ்வு என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இதனால் அடுத்த வாரம் பேரழிவுகள் நடக்கலாம் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். சூப்பர் மூன் நிகழ்வு உலகில் நில நடுக்கங்கள், எரிமலை வெடிப்புக்கள் உள்ளிட்ட பேரழிவுகளைத் தூண்டும் என்பது நிபுணர்கள் கருத்து.

இதற்கு முன் 1955,1974,1992 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் இந்த சூப்பர் மூன் நிகழ்வு நடந்துள்ளது. அந்த 4 ஆண்டுகளிலுமே மோசமான வானிலை நிகழ்வுகள் நடந்துள்ளன.

சந்திரனால் பூகம்பத்தை ஏற்படுத்த முடியாது. ஆனால், கடல் அலைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இந்த மாற்றம் வானிலையோடு சேர்ந்தால் கடலோரப் பகுதிகளில் பேரழிவுகள் ஏற்படும் என்று வானிலை ஆய்வாளர் ஜோன் கெட்லி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொலநறுவையில் பஸ் விபத்து ஒருவர் பலி; 19 பேர் காயம்

(கொழும்பு)

பொலநறுவையில் நேற்று காலை இடம் பெற்ற பேருந்து விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர் என பொலநறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவைக்கும் ஹிங்குராங் கொடைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் தனியார் போக்குவரத்து பேருந்து தடம் புரண்டதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலே ஒருவர் பலியாகியுள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 15 பெண்கள், 3 ஆண்கள் மற்றும் 9 வயது சிறுமி ஆகியோரே காயமடைந்தவர்களாவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் 8 பேர் படுகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# துணுக்காய் பிரதேச சபை தேர்தலும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நீதிமன்ற நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச சபைக்கான தேர்தலை தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க நேற்று முன்தினம் அரசியல் கட்சிகளில் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அந்தப் பிரதேச சபைக்கான தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தேர்தல் ஆணையாளர் இதனை தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று கட்சிகளின் பிரதிநிதிகள் அதிகாலை 6.30 மணிக்கு வாக்குச் சாவடிகளுக்கு வரவேண்டும் எனவும் அப்போது வாக்குப் பெட்டிகள் ஆவணங்களைப் பரிசோதித்த பின்னர் உரிய நேரத்தில் வாக்கெடுப்பை ஆரம்பிக்கலாம் எனவும் தயானந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி தற்காலிக தேர்தல் அலுவலகங்களை நடத்துவதற்கும் தேர்தல் ஆணையாளர் கட்சிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் கோயில் நிர்வாகத்தினரின் முயற்சியினால் யூ.கே. ரெட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மூளாய் வீதியில் ஸ்கந்தா குடிநீர் விநியோகத்தினை விஸ்தரிக்கும் நிகழ்வினை பொறியியலாளர் வி.வேலுப்பிள்ளை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# முகாம்கள் என்ற வார்த்தையே விவாதத்துக்குரிய ஒன்றாகும்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)



இந்தியாவின் தமிழகத்தில் புலிகளின் பயிற்சி முகாம்கள் தொடர்பில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்த விடயத்தில் முகாம் என்ற வார்த்தையே விவாதத்துக்குரியது.

மாறாக, புலிகள் இந்தியாவில் செயற்படுவதாகவும் அவர்களினால் இந்திய தலைவர்களுக்கு ஆபத்து என்றும் அண்மையில் இந்திய புலனாய்வு தகவல்களே தெரிவித்திருந்தன என்று விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தி யாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### தமிழே! அமுதே!

கண்மணியின் சிரிப்பொலியில்
கவிதை ஒன்றை உணர்ந்தேன்
கண்ணிமைக்கும் நொடியில்
அதன் காரணத்தை அறிந்தேன்
தித்திக்கும் தென்றலில்
தேன் தமிழ் மொழியினில்
அன்னையின் மடியில்
அவரின் அரவணைப்பில்
கண்ணனின் குழலில்
எழுந்திடும் ஓசையில்
பாரினில் மறைந்திடும்
மதியின் ஒளியில்
மழலையின் சிரிப்பில்
கவியின் ஆற்றலில்
கவிதையின் துலக்கம் கண்டேன்

எஸ்.சிவனுஷா
கொக்குவில்

### மீ[மா]ட்சி பெறுமா?

அமாவாசை நிலவில் எங்கள்
மனிதங்கள் சிரிக்கிறது
பௌர்ணமி இருட்டில் எங்கள்
பண்பாடு பதறி அழுகிறது
கானல் குளத்தருகே கலாசார
இதயம் ஒன்று
கண்ணீர் சொரிகிறது
காய்ந்த கள்ளிச் செடியருகே
கரங்கள் இரண்டு மட்டும்
கைகொட்டி சிரிக்கிறது!
இன்னும் எத்தனை நாளைக்கு...

கவிநளன்
மல்லாகம் பா.கெஸ்ரன்

### தியாகம்

தியாகம் என்ற சொல்லுக்கு
அகராதிகளில்
அர்த்தம் தேடினேன்
என்ன ஆச்சரியம்...!
அதிலெல்லாம்
என் அம்மாவின் பெயர்

செ.ரவிசாந், குப்பிளான்

### பரிணாமம்

சங்க காலத்தில் சரித்திரமாகி
ஐந்து நிலத்திலும் அடி பதித்து
பச்சை மரச்சோலையும்
பசுங்கிளியும் பார்த்த காதல்
இன்று
புரிதலின்றி புதுவிதமாகி
இன்ரநெற்றில் புகுந்து
பேஷ்புக்குடன் பேமஸ் ஆகிறது
இது தானாம் நவீனகாதல்!

ரி.சீதா
வீரவாளி, புத்தூர்.

### கவிதைத் துளிகள்

**திருமணம்**
இரு மனம் இணையும்
திருநாள்

**அழுகை**
இவ்வுலகில் மனிதன்
அவதரித்ததும்
எழும் முதல் ஓசை

**கண்ணாடி**
பொய்யான இவ்வுலகில்
உன்னை மெய்யாகப்
காட்டும் மாயவிம்பம்

**நினைவு**
மனம் என்னும் திரையில்
ஓடுகின்ற திரைப்படம்

பொ.இளவரசி, பருத்தித்துறை

### கவிப் பிரசவம்

செவ்வானத்தில் கதிரவன்
புன்னகைப்பான்
மாலை வெள்ளியும்
சிரித்திருக்கும்
மீனவன் விளைமீன்
பிடித்திழுப்பான்

பறவையினம்
சடசடத்து இருப்பிடத்தை
நோக்கி விரையும்

குஞ்சினம் அன்னையரின்
வரவுக்கணத்தை
எதிர்பார்த்து
காத்திருக்கும்

கவிஞனுக்கு கவி
புனைவதற்கான
பொழுதுகள்

மகாகவிஞனுக்கு
கவிப் பிரசவ வேதனையும்
சாதனையுந்தான்

ஆ.முல்லைத்திவ்யன்
பொலிகண்டி

### மௌனம்

எத்தனையோ மௌனங்களை
மொழி பெயர்த்திருந்தும்
இறுதியில் தோற்றே போனேன்,
உன் நிரந்தர மௌனத்தில்

தி.கோபிநாத், மட்டுவில்

### தேடல்

புதைந்துபோன என்
உடலினை
மீண்டும்
தோண்டுகின்றேன் –உன்
நினைவுகள்
புதைந்துவிடக் கூடாதென்று

மகே. மேனன்

### இமயம் தொட...

எப்போது நீ
தப்பைக் கண்டு
தட்டிக்கேட்காமல்
விலகிச் செல்கிறாயோ?
அப்போதே தப்பிற்கு
துணை போகிறவனாகிறாய்
தப்பெனில் சுட்டிக்காட்டு
மகாத்மாவாக வாழாவிடினும்
மனிதனாகவேனும்
வாழப்பழகு

மாவை. நா.கஜேந்திரா

### கல்லாய்ப் போன மனிதம்...

சாபங்கள் கொடுத்தோம்
வரங்களும் கொடுத்தோம்
சாபவிமோசனம் மட்டும்
தூரமாய்ப் போனதடி
கல்லாகிப் போன
அகலிகைகளின்
மனப்பாரமதை
இறக்கி வைக்க
யாது செய்தோம்?
ராமனைப் போல
சந்தேகம் கொண்டோம்
எமக்காய் எத்தனை
பாரங்களைச் சுமந்த
இதுவா நாம் செய்யும்
கைமாறு...

புலோலியூர், வேல்நந்தன்



## மௌனத்தின் தேடல் – 61

### தொடரும்...

விழிகளில் சொரியும்
அருவி நீரினை
துடைத்திட மனிதம்
இங்கில்லை
கட்டிய வீடும்
எனக்கில்லை
வற்றிய உடலோ
வெறுமையாய்

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரா

### அறியீரோ அம்மணியே

அழுதாலும் தொழுதாலும்
ஆவது ஒன்றுமில்லையென
நல்லூரின் தவயோகி
குலுங்கி அழுத கதை
அறியீரோ அம்மணியே!

ந.சந்திரலிங்கம்
அச்சுவேலி.

### போரின் பரிசு

ஊரினையிழந்து
உறவுகளையிழந்து
நலன்புரி முகாமில்
நெடுநாள் வாழ்ந்து – மீள்
குடியமர்வு என்று வந்தபோது
வீடுமில்லை வேலியுமில்லை

வி.அபிசன்
அல்லையம்பதி

### சொந்தம்

உறவுகளும் உடைமைகளும்
உனை விட்டு போக
கண்ணீர் மட்டும்
உன் சொந்தமானதோ?

லி.கேனுஜன்
நாவாந்துறை

### அடிமைகள்

ஆயுள் முழுவதும்
கையேந்தி நின்றிடும்
அவலம் எமக்கு
தமிழன் என்பதாலா?

கி.சரண்யா
தாவடி

### இழப்பதற்கு ஏது...?

அலைகளாய் இடிகளாய்
எம்மை அழித்துச் சென்று
எம் உறவுகளை பறித்துச்
சென்றனவோ?

அ.மக்கிலின்
பருத்தித்துறை.

### எங்கே நிம்மதி...?

தொலைந்து விட்ட நிம்மதியை
தனிமையிலே தேடுகிறாள்
வெட்டைக்குள் குடிபுகுந்து
ஏதிலியாய் வாடுகிறாள்
இயற்கை அன்னையின்
கோரத்திற்கு இலக்கான தாய்...!

சி.வினோவர்மன், புளியங்கூடல்

### முகவரி தேடி

மீதி வாழ்க்கையின்
முகவரி தேடி
தனிமைப்படுத்தப்பட்ட
இவள்
ஆதரவற்ற அநாதையாய்...

சி.கலைமகள்
தொல்புரம்

### அவலம்

நரை, திரை
நலிவடைந்த உடலோடு
நடுங்குவதேன்
வெயிலிலிருந்து
தூரத்தே தெரியும்
பட்ட மரம்போல்
தூர்ந்துபோன
இருப்பை எண்ணியதாலோ?

குருநகர்
யோகி

### யார் தருவார்?

அனுதினம் அழுது
ஆண்டவனை தொழுதாலும்
அமைதியை தருவது
ஆண்டவனா-?
அரசனா-?

அனுஷன்
ஒட்டுமடம்

### போர் இச்சை...!

என்ன
கொடூரமிது–எம்
குலமாதாவே
போர் இச்சையால்
பிய்த்தெறியப்பட்ட உன்
வாழ்வை நினைத்து
வருந்துகிறாயோ?

து.திலக்
யாழ்ப்பாணம்.

### அக்கினிப் பெருமூச்சு

போர் வந்து விளையாடியதால்
பாரினிலே துடிக்கின்றாள்
யார் இனித் தேற்றுவதென்று
வேரிழந்து கையேந்துகிறாள்

ஜெயம் ஜெகன்
புதுக்குடியிருப்பு

### கலங்காதே!

தாயே!
உன்னை கையேந்த
வைத்தவர்கள்
நாளை
உன்னிடம்
கையேந்தி நிற்பார்
இது
திண்ணம்!

உயிரோவியன்

### தொலைந்த உறவு

வன்னி மண்ணிலே-உன்
உறவுகள் தொலைந்ததை
நினைத்து அழுகின்றாயா?
அல்லது உன் உறவுகளின்
ஞாபகம் வந்ததை
நினைத்து அழுகின்றாயா?

சி.சத்தியசீலன்
கெருடாவில் தெற்கு

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 62



**அன்பு வாசகர்களே!**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 18.03.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் மக்கள் தமது பிள்ளைகளுடன் தாய் மொழியில் பேசுவதே சிறந்தது

## ஜேர்மன் பேராசிரியர் தெரிவிப்பு

புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் மக்கள் தமது பிள்ளைகளுடன் தாய்மொழியில் பேசுவதே சிறந்தது என ஜேர்மனில் உள்ள பிராங்போட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பெற்றா சொல்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு; அண்மையில் ஜேர்மனுக்கு பயணம் மேற்கொண்ட துருக்கி பிரதமர், ஜேர்மன் வாழ் துருக்கி மக்கள் தமது பிள்ளைகளுடன் தாய்மொழியில்தான் பேச வேண்டும் என்பதுடன் அதனை தான் முதலில் கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால், அதனை நிராகரித்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் வெஸ்ரவெல ஜேர்மனில் வளரும் பிள்ளைகள் ஜேர்மன் மொழியைத் தான் முதலில் கற்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஆனால், ஜேர்மன் வெளிவிவகார அமைச்சரின் கூற்றை நிராகரித்த ஜேர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் பெற்றா, புலம் பெயர் மக்கள் தமது பிள்ளைகளுடன் சொந்த மொழியில் பேசுவதே சிறந்தது என தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளுடன் சொந்த மொழியில் பேசும் மக்கள் மிகவும் சுலபமாக உணர்கின்றனர். அவர்களின் இன அடையாளத்தையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த அது உதவும். அவ்வாறு இல்லாத பெற்றோர் பாதுகாப்பற்றதாக உணர்கின்றனர்.

மனித மூளை ஒரே நேரத்தில் பல மொழிகளை கற்கும்திறன் கொண்டதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தில் 4 ஆயிரத்து 500 இலங்கையர்கள் தஞ்சம்

தமது நுழைவு காலாவதியான நிலையில் குவைத்தில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொதுமன்னிப்புக்கு பலன் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குவைத்தில் தமது விசா காலாவதியான நிலையில் இருந்த நாலாயிரத்து 500 இலங்கையர்கள் அங்குள்ள இலங்கை தூதுவராலயத்திற்கு சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புபணியகம் தெரிவித்துள்ளது. குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் இந்த மாதம் முதல் எதிர்வரும் யூலை மாதம் வரை தம்மை வெளிப்படுத்தும் பட்சத்தில் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என குவைத் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாதெனவும் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் தற்போது குவைத்துக்கான இலங்கை தூதுவராலயத்தில் சரணடைந்தவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை தூதுவராலயம் மேற்கொண்டுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது. (ஶ்ரீ)



மட்டுவில் ஞானக்குமாரன் எழுதிய சிறகு முளைத்த தீயாக என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலக்கிய புரவலர் காசிம் உமர் சிறப்புப் பிரதியை வெற்றி எவ்.எம் இயக்குநர் ஏ.ஆர்.வி. லோஜனுக்கு வழங்குவதையும் அருகில் ஞானக்குமாரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தயாரில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு தயாரில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தலைமையிலான மக்கள் சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள போதும் மக்களுக்கு சலுகைகள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் முகமாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தியை மக்கள் புரிந்துகொண்டுள்ளதாக அவர் இதனைக் குறிப்பிட்டார். இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் அரச சார்பற்ற அமைப்புக்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# இரகசிய பொலிஸார் போன்று நடித்து தமிழர்களிடம் கொள்ளையிட்டோர் கைது

இரகசியப் பொலிஸார் போன்று நடித்து தமிழர்களிடம் கொள்ளையடித்து வந்த கும்பலொன்றை கொழும்பு கொட்டாஞ்சேனை குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த காலங்களில் கொட்டாஞ்சேனையில் பல பகுதிகளிலும் இரகசியப் பொலிஸார் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டவர்கள் மூலமாக தமிழ் மக்களின் பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

அதுபற்றி ஏராளம் முறைப்பாடுகளும் பொலிஸில் பதியப்பட்டிருந்தன. அவ்வாறான நிலையில் அதே கும்பல் தமிழர் ஒருவரின் வீட்டைக் கொள்ளையிடும் நோக்கில் பயணித்துக் கொண்டிருந்த போது கொட்டாஞ்சேனைப் பொலிஸின் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பொரளை மற்றும் தெமட்டகொட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகள் மூலம் அறியப்பட்டுள்ளது. அவர்கள் கொள்ளையடித்த பல இலட்சங்கள் பெறுமதியான பொருட்கள் குறித்தும் பொலிஸார் கண்டறிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# சட்டவிரோதமாக ஆஸி.செல்ல முற்பட்ட 58 பேர் கைதாகினர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்ட விரோதமாக செல்ல முற்பட்ட குழுவினர் நீர்கொழும்பு மற்றும் வெள்ளவத்தை ஆகிய இடங்களில் வைத்து பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து சுமார் 58 பேர் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அவர்களில் 40 ஆண்கள்,12 பெண்கள் மற்றும் 6 குழந்தைகள் என குறிப்பிடப்படுகிறது. நீர்கொழும்பு மற்றும் வெள்ளவத்தை ஆகிய பிரதேசங்களில் விடுதிகளில் தங்கியிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டவர்கள் யாழ்ப்பாணம் ,கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக செல்ல முற்பட்ட படகை சிலாபத்தில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அதேவேளை அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு ஒவ்வொருவரும் தலா 4 இலட்சம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# 2011.03 13 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1639-ஹாவர்ட் பல்கலைக்கழகத்துக்கு சமயவாதி ஜோன் ஹவார்ட் என்பவரின் பெயர் இடப்பட்டது.

★ 1781-வில்லியம் ஹேர்செல் யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தார்.

★ 1811-பிரித்தானியர் பிரெஞ்சுப் படைகளை லீசா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தனர்.

★ 1881-ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் தனது மாளிகைக்கு அருகில் நடந்த குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டான். (ஜூலியன் நாட்காட்டியில் இது மார்ச் 1 இல் இடம்பெற்றது)

★ 1900-பிரான்சில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் வேலை நேரம் சட்டப்படி 11 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.

★ 1908-நெல்லைக்கு வந்த வ.உ.சி.சுப்பிரமணிய சிவா பத்மநாப ஐயங்கார் கைது செய்யப்பட்டதால் திருநெல்வேலியில் எழுச்சி ஏற்பட்டது.

★ 1921-மொங்கோலியா சீனாவிடம் இருந்து தனது விடுதலையை அறிவித்தது.

★ 1940-இந்திய விடுதலைப் போராட்ட வீரர் உத்தம் சிங் லண்டனில் காக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் வைத்து இந்தியாவின் முன்னாள் ஆளுநர் மைக்கேல் டயர் என்பவரை சுட்டுக்கொன்றார்.

★ 1943-ஜேர்மனியப் படைகள் போலந்தின் யூதக் குடியேற்றங்களை அழித்தன.

★ 1954-வியட்நாம் பேர்:-வியட்மின் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கின.

★ 1957-கியூபா ஜனாதிபதி புல்ஜென்சியோ பட்டீஸ்டாவைக் கொல்ல மாணவ தீவிரவாதிகள் எடுத்த முயற்சிதோல்வியில் முடிந்தது.

★ 1969-அப்பல்லோ 9 விண்கலம் பாதுகாப்பாக பூமி திரும்பியது.

★ 1979-கிரெனடாவில் இடம்பெற்ற புரட்சி ஒன்றில் அதன் பிரதமர் எரிக் கெய்ரி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1992-கிழக்கு துருக்கியில் இடம்பெற்ற (6.8 ரிக்டர் அளவு) நிலநடுக்கத்தில் 500 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

★ 1996-ஸ்கொட்லாந்து டன்பிளேன் நகரில் இடம் பெற்ற சூட்டு நிகழ்வில் 16 மாணவர்களும் ஓர் ஆசிரியரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலையாளி தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

★ 1997-அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரின் மீது பீனிக்ஸ் வெளிச்சங்கள் தெரிந்தன.

★ 2007-2007உலகக் கோப்பை துடுப்பாட்டம் (கிரிக்கெட்)போட்டிகள் மேற்கந்தியத் தீவுகளில் ஆரம்பம்.

### பிறப்புக்கள்

★ 1733-ஜோசப் பிரீஸ்ட்லி, ஒக்சிசனைக் கண்டுபிடித்தவர் (இ.1804)

★ 1839-ஜாம்ஷெட்ஜி டாடா, இந்தியாவின் நவீன தொழில்துறையின் முன்னோடி (இ.1904)

### இறப்புக்கள்

★ 1936-கா.நமச்சிவாயம், தமிழறிஞர் (பி.1876)

★ 1975- ஐவோ ஆண்டிரிக், நோபல் பரிசு பெற்றவர் (பி.1892)

**2003-இத்தாலியில் 3இலட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான மனித அரிச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக நேச்சர் இதழ் அறிவித்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கும் ஊழியர்களுக்கு விசேட விடுமுறை

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் தினமான எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக் கிழமை வாக்களிக்கவுள்ள ஊழியர்களுக்கு 5 மணித்தியாலங்களிற்குக் குறையாத விஷேட விடுமுறை வழங்கப்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

எழுத்து மூலம் விண்ணப்பிக்கும் ஊழியர் எவருக்கும் வாக்களித்துவிட்டு அலுவலகத்திற்குத் திரும்பி வரப்போதுமானளவுக்கு விடுமுறை வழங்க மறுத்தல் தேர்தல் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றம் எனவும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் தேர்தல் சட்டத்தின் 84(ஏ) பிரிவின் கீழ் வாக்களிக்கும் ஊழியருக்கு அதற்கென விடுமுறை வழங்குவது கட்டாயமாகும். அந்த வகையில் அரச மற்றும் தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் வாக்களிப்புக்காக விடுமுறை தருமாறு எழுத்துமூலம் தமது நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்டவர் தொழில் புரியும் இடம், அவர் வாக்களிக்கவுள்ள வாக்களிப்பு நிலையம் என்பனவற்றுக்கிடையிலான தூரத்தை அடிப்படையாகக் கொண்டு விடுமுறைக்கான காலப் பகுதி தொழில் தருநரால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

அவர் வாக்களித்து விட்டு வேலைக்கு வந்து சேர்வதற்குப் போதுமானதாக அது இருத்தல் வேண்டும் என்பதுடன் 2 மணித்தியாலங்களிற்குக் குறையாததாகவும் அமைதல் அவசியமாகும்.

இந்த விடுமுறையானது வழமையான விடுமுறைகளைப் போலன்றி விஷேட விடுமுறையாகக் கருதப்பட வேண்டும். அது மாத்திரமன்றி அரச, தனியார் நிறுவனங்களில் சமையாசமய மற்றும் தற்காலிக அடிப்படையில் கடமையாற்றுவோர் உட்பட அனைவரும் இந்த விடுமுறையைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடையவர்களாவர்.

இதேவேளை கடந்த தேர்தல்களின் போது சில நிறுவனங்களில் வாக்களிப்பதற்கான விஷேட விடுமுறையைப் பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்பட்டதாக தேர்தல்கள் செயலகத்திற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் சட்டத்தால் பரிந்துரை செய்யப்பட்ட இந்த விடுமுறையை வழங்க மறுக்கும் நிறுவனமொன்றுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படும் பட்சத்தில் 500 ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அவ்வாறில்லாவிடின் மேற்படி இரு தண்டனைகளுமோ விதிக்கப்படலாம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார்.

(ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை சென்ஜேம்ஸ் வீதியிலும் (ஆண்கள் பாடசாலை முன்பாக) நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை 2ஆம் குறுக்குத்தெருவிலும் (அன்னை வேளாங்கண்ணி முன்பாக) வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக் கொள் ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை அரசாங்கம் ஊகங்களின் அடிப்படையில் கருத்து வெளியிடக்கூடாது

## இந்தியா கண்டிப்பு

(கொழும்பு)

ஊகங்களின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் கருத்துக்களை வெளியிடக் கூடாது என இந்திய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ் நாட்டில் 3 விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம்கள் இயங்கி வருவதாக அண்மையில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் நோக்கில் இந்த கோரிக்கை விடப்பட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்படாத ஊகங்களின் அடிப்படையிலான தகவல்கள் தொடர்பில் இலங்கை பதற்றம் அடையத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரதமரினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்து துரதிர்ஷ்டவசமானது என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஸ்ரீ விஷ்ணுப்பிரகாஷ் குறிப்பிட்டுள்ளார்.


டில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாட்டில் புலிகளின் பயிற்சி முகாம்கள் காணப்படுவ தாக இலங்கைப் பிரதமர் வெளியிட்ட கருத்துக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் இராமலிங்கம் திருவாதிரை



(முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ திருப்பதி (பிறைவேற்) லிமிடெட்)

முன்னாள் யாழ்ப்பாணம் திருப்பதி ஸ்டோர்ஸ் உரிமையாளரும், இல.130,4ஆம் குறுக்குத்தெரு கொழும்பு 11, ஸ்ரீதிருப்பதி (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபகரும், காரைநகர் பலகாடு இராமலிங்கம்- பாக்கியம் தம்பதிகளின் புதல்வரும் வலந்தலையைச் சேர்ந்த தில்லையம்பலம்-இராசம்மா தம்பதிகளின் மருமகனும் ஆகிய இராமலிங்கம் திருவாதிரை அவர்கள் 10.03.2011 வியாழக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக்கணவரும், செந்தமிழ்ச்செல்வி, சாந்தி, இராஜராஜன், இரஞ்சினி, இராமகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், க.உருத்திரசிங்கம், க.சண்முகலிங்கம், ஸ்ரீஷயானா, சி.கலாதரன், சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதிகா, இராசாராம், யசோதை, துளசி, பானுமதி, சங்கவி, வசீகரன், சத்யா, சக்தி ஆகியோரின் அன்புப்பேரனும், நாகரத்தினம், கணேசமூர்த்தி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோகாம்பிகை, இராஜேஸ்வரி, அமரர் கு.சிவஞானம் மற்றும் குகதாசன், அமரர்கள் சிவசம்பு, தேவராஜா, தர்மலிங்கம் மற்றும் விஸ்வலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2011) திங்கட்கிழமை காலை 9.00மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று முற்பகல் 11.00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

– குடும்பத்தினர்.

இல.70-1-1 புதுச்செட்டித்தெரு,
கொழும்பு-13

தொலைபேசி – 2423997, 0777671151

(க-2679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் விதியை நீங்களே தீர்மானியுங்கள்!

உங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அரசியல்- வாதிகள் மட்டுமல்ல... ஜோசியர்களும் சாமியார் களும்கூட ஆசைப்படுகிறார்கள்.

தங்கள் அன்பினால் உங்களைக் கட்டுப்படுத்தத் தெரியாமல், உங்களுக் குள் ஒரு பயத்தையும் குற்ற உணர்ச்சி யையும் உண்டுபண்ண, பாவம்- புண்ணியம், நல்லது-கெட்டதுஎன்றெல் லாம் சொல்லி உங்களைக் குழப்பி வைத்திருக்கிறார்கள்.



'உங்கள் வெற்றியையும் தோல்வி யையும் நிர்ணயிப்பது உங்கள் தலை எழுத்துத்தான்!' என்று அடித்துச் சொல்லி உங்களை நம்பவைத்திருக் கிறார்கள். விரும்பியது உங்களுக்குக் கிடைக்கவில்லையென்றால், அதற்கு முழுக்காரணம், நீங்கள்தான். வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்பதை நீங்கள் தான் கவனமில்லாமல் தீர்மா னித்திருக்கிறீர்கள். ஆசைப்பட்டதற்கு உரியவராக உங்களை நீங்கள் தயார்ப் படுத்திக் கொள்ளவில்லை. அது உங்கள் தவறுதானே தவர, விதியின் விளையாட்டல்ல!

தன் கம்பியூட்டர்முன் அமர்ந்து, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் முன்கூட்டியே திட்ட மிட்டுக் கொண்டிருப்பதைத் தவிர, கடவுளுக்கு வேறு வேலை இல் லையா, என்ன? இந்தக்கதைகளை எல்லாம் நம்ப நீங்கள் என்ன சிறு குழந்தையா? பிறப்பின் காரணமாக, வளர்ப்பின் மூலமாக, சில அடிப்படைக் குணங் களை நீங்கள் விரும்பியோ, விரும் பாமலோ பெற்றுவிட்டீர்கள். அந்தக் குணாதிசயங்கள்தான் உங்கள் பாதை யைத் தீர்மானிக்கின்றன. அதுகூட ஓரளவுக்குத்தான். மற்றப்படி, கவனத் தோடு செயற்பட்டால், தலை யெழுத்து என்று ஒன்று இருந்தாலும், அதை உங்கள் விருப்பப்படி திருத்தி எழுதிக் கொள்ளமுடியும்.

தனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக்கொண்ட ஓர் அறிவுஜீவி யிடம் சங்கரன் பிள்ளை வந்திருந்தார்.

"எனக்கு அழகான மகள் இருக் கிறாள். எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறாள். ஆனால், அவளுக்கு ஒரு பிரச்சினை. காலையில் எழுந்ததும் மந்தமாக இருக்கிறாள். சாப்பிட் டதையெல்லாம் வாந்தியெடுத்து விடு கிறாள். இதற்கு என்னகாரணம்?" என்று கேட்டார்.

அறிவுஜீவி கண்மூடிச் சற்றுநேரம் யோசித்துவிட்டுக் கேட்டார்... "உன் மகள் பால் குடிப்பது உண்டா?"

"உண்டு. சிறந்த பசுவிடம் இருந்து சுத்தமாகக் கறக்கப்படும் மிகத்தரமான பாலைமட்டும்தான் அவளுக்குக் கொடுக் கிறோம்" என்றார் சங்கரன்பிள்ளை.

"அங்கேதான் பிரச்சினை" என்றார் அறிவுஜீவி

வயிற்றுக்குள் போனதும், பால் தயிராகி விடும். இரவு படுக்கையில் உன்மகள் புரளும்போது, அந்தத் தயிர் கடையப் பட்டு வெண்ணை திரளும். உடம்புச்சூட் டில் அந்த வெண்ணை உருகி நெய்யாகி விடும். அந்த நெய் இரசாயனமாற்றத்தால் சர்க்கரையாகிவிடும் அந்தச்சர்க்கரை இரத் தத்தில் கலக்கும்போது ஒரு போதை பிறக்கும், காலையில் அந்த போதை தெளிவதற்குள் எழுந்திருப் பதால்தான், உன்மகளுக்கு அந்தப்பிரச்சினை!"

புரிந்து கொள்ளமுடியாத சூழ்நிலை களுக்கெல்லாம் விதியின் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்வதும், இந்த அறிவு ஜீவி சொன்ன காரணத் தைப்போல அர்த்தமில்லாததுதான்! எல்லாமே விதிப்படிதான் நடக்கு மென்று சில பெரியவர்கள் சொல்வதை நம்பி, உங்கள் பார்வையைக் குறுக்கிக் கொள்வீர்களா? உங்கள் உறுதியை மழுங்கடித்துக் கொள்வீர்களா? யாருக் கும் வெளிச்சூழ்நிலை எல்லாத்தருணங் களிலும் நூறு சதவீதம் விரும்பியபடி அமைந்து விடுவதில்லை. மாற்றமுடி யாத சூழ்நிலையை எதிர்த்து நின்றால், அமைதி காணாமற் போகும். மூளை ஸ்தம்பித்து நிற்கும். மாறாக, அதை உள்ளபடி ஏற்றுக்கொண்டுவிட்டால், அடுத்து என்ன செய்வது என்று புத்தி சாலித்தனமமாக யோசிக்கமுடியும். இதற்காகத்தான் விதியென்று சொல்லி வைத்தார்கள்.

ஆனால்நீங்களோ, விதியென்றால் எதையும் சகித்துக் கொண்டு செயலற்று இருப்பது என்று தவறாகப் புரிந்து கொண்டுவிட்டீர்கள். நான் உங்களை எந்தச் சூழ்நிலையையும் சகித்துக்கொள் ளச் சொல்லவில்லை. சகித்துக் கொள் வது என்பது விருப்பத்தோடு செய்வதல்ல.



## ஆன்மீகம் 43

கட்டாயத்தால் செய்வது.

எனவே அதை விடுத்து, எதையும் அமைதியாக ஏற்றுக்கொண்டு, விதியை உங்களுக்கேற்ப மாற்றிக் கொள்வது எப்படி என்று யோசித்துச் செயலாற் றுங்கள் என்கிறேன். நீங்கள் வளர வேண்டுமானால், இது பற்றிய பயமு றுத்தல்களிலிருந்து முத லில் வெளியே வரவேண்டும்.

'கடவுளே வந்து சொன்னாலும், என் விதியை நான்தான் தீர்மானிப்பேன்' என் கிற உறுதி உங்களிற்கு வரவில்லை என்றால், உங்கள் வாழ்க்கை அதன் போக்கில்தான் நடக்கும். விரும்பியதை அடைய வேண்டும் என்ற தீவிரம் உங் களுக்கு இருந் தால், உங்கள் விதியைக் கடவுளிடமிருந்து பறித்து, நீங்களே அதைக் கையாளமுடியும்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

08



'தான் தோன்றித்தனமாக தன்னை வடிவமைத்துக்கொண்டு வெளிவந்தி ருக்கிறது' என தா. ராசு போன்றோர் சுந்தரராமசாமியின் ஜே. ஜே. சிலகுறிப்

"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

புகள் பற்றிக் குறிப்பிடுவர். சுந்தரர்ம சாமிக்கு துதிபாடுவோர் தமக்கு விளங்கியதாகக்கூறிப் போற்றிக் கொள்வர். நிர்வாணமாக நிற்கும் அரசன், தான் கண்களுக்குத்தெரியாத ஆடை அணிந்திருப்பதாகச் சொல் வது போலவும் அதனை நம்பிக் கொள்வது போலவும் நடிக்க வேண்டும். விஷ்ணுபுரமும் இந்தக் கருத்துக்குச் சோடை போனதல்ல இப்படைப்புக்களைப் புரிந்து கொள் வதற்கு ஆசிரியர் கூடவே இருந்து விளக்கம் தந்தால்தான் முடியும்.

இவை தமிழ்நாவல் துறையில் வந்திருக்கும் பரிசோதனையாயின், நாவல் என்ற சம்பிரதாய அமைப்புக்கு அப்பாற்பட்டவையாயின் அதில் எமக்கு உடன்பாடே ,ஆனால் நல்ல இலக்கிய நாவல்கள் என்று கருதுவனவற்றிற்கு அப்பால் சிறப்புடையனவாக வற்பு றுத்துவார்களாயின் தமிழ் இலக்கியத்தில் நாவலுக்கு அடுத்ததாக ஒரு புதிய இலக் கியத்தறை வரும் போது (அறிமுகமா கும்போது) அத்துறையின் ஆரம்ப முயற்சிகளாக இந்நாவல்கள் நிச்சயம் இடம்பெறும்

ஈழத்தில் கானல், காட்டாறு தி. ஞானசேகரின் குருதிமலை, செ. யோக நாதனின் கிட்டி என்பன குறிப்பிடத் தக்கவை

அதே வேளையில் மலினமான நாவல் களைப் படைப்பவர்கள் தமிழில் இல்லாது போய்விடவில்லை. ஆரணி யாரும் வடுவூராரும் கோதைநாயகி அம்பாளும் சிரஞ்சீவியும் மேதாவியும் எங்களுடன் இன்றும் உள்ளனர். புஸ்பா தங்கத்துரை, இராஜேஸ்குமார், இராஜேந்திரகுமார், ரமணிச்சந்திரன் போன்ற நூற்றுக்கணக்கான எழுத்தா ளர்கள் உள்ளனர்.

**ஆய்வுக்குரிய நூல்கள்**

1. தமிழ் நாவல் இலக்கியம், பேராசிரியர்ர் க. கைலாசபதி
2. சமூக நாவல்கள்- டாக்கடர் இரா. தண்டாயுதம்
3. தமிழ் நாவல்கள்- அகர வரிசை. டாக்டர் வே. சீதாலட்சுமி
4. தமிழ் நாவல்களின் இலக்கியத்தரம்-த. ராசு
5. தமிழ் நாவல்கள்-கா.நா.முத்தையா
6. தமிழில் சமூகநாவல்கள்- தா.வே.வீராசாமி
7. நாவலும் வாழ்க்கையும்- பேராசிரியர் கா. சிவத்தம்பி
8. ஈழத்துத் தமிழ் நாவல்கள்- நா.சுப்பிரமணியன்
9. தலித் இலக்கியம்- எம். கண்ணன்
10. தலித்திய விமர்சனக் கட்டுரைக்கள்-ராஜ்கௌதமன்
11. நாவல் வளர்ச்சி - டாக்டர் இரா. மோகன்
12. தமிழ்நாவல்-நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்- பொ.கே.சுந்தரராஜன், சோ.சிவபாதசுந்தரம்

**ஈழத்துத் தமிழ் நாவல்கள்**

ஈழத்தின் ஆரம்ப நாவல்களாக ஏறக்குறைய ஐம்பது நாவல்கள் வெளிவந்துள்ளன. இந்நாவல்கள் எழுதப்பட்டு வெளிவந்த காலகட் டத்தில் அவை தமிழ் நாட்டுத் தமிழ் நாவல்களின் போக்கோடு ஒத்திருந் துள்ளன.தமிழ் நாட்டின் ஆரம்பகால நாவல்களாக 500 இற்கு மேல் வெளிவந்துள்ளன. 18 ஆம் நூற்றாண் டில் தமிழ் இலக்கியத் துறைக்குள் புகுந்த புதியதொரு வடிவம் நாவ லாகும். நாவல் உட்பட புனைகதை வடிவங்கள் மேலைத் தேசத்து இலக் கிய வடிவம் என்பதை மறுக்முடியாது.

18ஆம் நூற்றாண்டில் கீழைத் தேசத்தில் ஆங்கிலேயரின் மேலாதிக் கத்துடன் இந்த இலக்கியவடிவம் அறி முகமாகியது. இதனை நமது நாட்டு ஆய்வாளர் பேராசிரியர் கைலாசபதி அழகாகக் கூறுவார். எந்தவொரு துறை யையும் நிகழ்வையும் மார்க்சின் கண்களூடாகப் பார்க்கின்ற கைலா சபதி, தமிழ்க் காவிய மரபினின்றும் பொருளிலும் நடையிலும் மாறுபட்ட வசனகாவியம், மேலைத்தேசத்தின் நில மானியச் சமூகம் வலிமையிழந்த நிலையில், புதியசமூக வர்க்கங்கள் தோன்றிய நிலையில், கல்வி அறிவு பெற்ற மத்தியதர வர்க்கத்தின் உதயத் துடன் கீழைத்தேசத்தில் அறிமுக மாகியது என்பாதாகும்.

கலாநிதி செங்கைஆழியான் க.குணராசா

உழுதுவித்துண்போரான உயர்குடி மக்கள் ஆறஅமர இருந்து இன்புற உத விய எழுத்திடப்பட்ட காவிய மரபு இலக்கியங்கள், உழுதுண்போரின் அதா வது சாதாரண எளிய மக்களின் எழுத் திடப்படாத இலக்கியங்களுக்கு மாற்றீடாக வசனகாவியங்களாக நாவல் என்ற வடிவில் வெளிவரத் தொடங்கின என்பதாகும்.கல்வியறிவு படைத்த மத்தி யதர வகுப்பார் அதில் முழு மூச்சுடன் ஈடுபடத் தொடங்கினர். மன்னர்களை யும் தன்னிகரில்லாத் தலைவர்களை யும் பாடுபொருளாகக் கொண்ட காவியமரபு மாற்றமடைந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக 'மெகா' கோடீஸ்வரர்கள்

# கார்லோஸ் ஸ்லிம் முதலிடம்



(நியூயோர்க்)

உலகின் 'மெகா' கோடீஸ்வரர் பட்டியலில், மெக்சிகோ நாட்டை சேர்ந்த கார்லோஸ் ஸ்லிம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் இடம்பெற்றுள்ளார்.

போர்ப்ஸ் பத்திரிகை (Forbes Magazine) இந்த ஆண்டிற்கான, உலக மெகா கோடீஸ்வரர்கள் பட்டியலை (Billionaires List) வெளியிட்டுள்ளது.

இதில் தொலைத்தொடர்புத்துறையில் உலகளவில், முன்னணியில் உள்ள கார்லோஸ் ஸ்லிம்மின் சொத்து மதிப்பு 20.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகரித்து, 74 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

இவருடைய நிறுவனம் அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளில், தொலைத்தொடர்பு சேவையில் ஈடுபடுகிறது.

உலகின் மெகா கோடீஸ்வரர்கள் பட்டியலில், 2-வது இடத்தில் மைக்ரோசொப்ட் கார்பரேஷன் நிறுவுனர் பில் கேட்ஸ் இடம்பெற்றுள்ளார். இவருடைய நிகர சொத்து மதிப்பு 56 பில்லியன் டொலராக உள்ளது. இவர் அவருடைய மொத்த சொத்தில் 30 பில்லியன் டொலரை (ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் என்பது அண்ணளவாக 11 ஆயிரம் கோடி ரூபாய்) தி கேட்ஸ் பவுண்டேஷன் அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விருவர்களையும் தொடர்ந்து, 3-வது இடத்திலுள்ள வாரன் பப்பட்டின் சொத்து மதிப்பு 50 பில்லியன் அமெரிக்க டொலராகவுள்ளது. முந்தைய ஆண்டு 7-வது இடத்தில் இருந்த எல்.வி.எம்.எச். நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி, பேர்னால்ட் ஆர்னோல்ட் 4ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இவருடைய சொத்து மதிப்பு 41 பில்லியன் டொலராக உள்ளது.

5-வது இடத்தில், ஒராகிள் நிறுவனத்தின் லேரி எலீசன் இடம்பெற்றுள்ளார். இவருடைய மென்பொருள் நிறுவனத்தின் பங்குகளின் சந்தை மதிப்பு, 30 சதவீதம் அதிகரித்ததையடுத்து, இவருடைய சொத்து மதிப்பு 39.5 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

போர்ப்ஸ் மேற்கொண்ட ஆய்வில், உலகளவில் மெகா கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 210ஆக அதிகரித்துள்ளது. இக்கோடீஸ்வரர்களுள், அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே மிகவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்த கோடீஸ்வரர்கள் பட்டியலில், 50 சதவீதத்தினர், பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் புதிதாக உருவாகியுள்ளனர்.

உலக மெகா கோடீஸ்வரர்களில் சீனாவில் உள்ளவர்களின் எண்ணிக்கை 69இல் இருந்து 115 ஆக அதிகரித்துள்ளது. இந்தியக் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 49-ல் இருந்து 55ஆக உயர்ந்துள்ளது. இதேபோல் ஆசிய பசுபிக் பகுதிகளில் 243-ல் இருந்து 332 ஆகவும் உயர்ந்துள்ளது.

உலக மெகா கோடீஸ்வரர்கள் பட்டியலில், முதல் 10 இடத்தில் உள்ளவர்களின் இடம்மாறியுள்ளது. ஆனால் தொடர்ந்து இவர்களே முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளனர்.

ஒரு பில்லியன் = 1, 000, 000, 000 = 1, 000 மில்லியன் = 100 கோடி

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

உலகின் முன்னணி கோடீஸ்வரர்கள் வரிசையாய்...;

### #1 கார்லோஸ் ஸ்லிம்



71 வயது மெக்சிக்கோகாரரான இவரது சொத்து மதிப்பு 74 பில். அமெ. டொலர். தொழில்: தொலைத்தொடர்புத்துறை, சுய முன்னேற்றம் கல்வி: பட்டதாரி.

### #2 பில் கேட்ஸ்



55 வயது அமெரிக்கரான இவரது சொத்து மதிப்பு 56 பில். அமெ. டொலர். தொழில்: மைக்ரோசொப்ட், வளர்ச்சி: சுயமுன்னேற்றம், கல்வி: பட்டப்படிப்பு இடைநிறுத்தம்.

### #3 வாரன் பப்பட்



80 வயது அமெரிக்கரான இவரது சொத்து மதிப்பு 50 பில். அமெ.டொலர். தொழில்: பெர்சயர் ஹாத்வே முதலீட்டு நிறுவனம், வளர்ச்சி: சுய முன்னேற்றம், கல்வி: பட்டதாரி.

### #4 பேர்னாட் ஆர்னல்ட்



62 வயது இந்த பிரஞ்சுக்காரரின் சொத்து மதிப்பு 41 பில். டொலர். தொழில்: அங்காடி வணிகம், வளர்ச்சி: பிறப்பால் மற்றும் சுயமுன்னேற்றம், கல்வி: பட்டதாரி.

### #5 லேறி எலீசன்



66 வயது அமெரிக்கரான இவரது சொத்து மதிப்பு 39.5 பில். டொலர். தொழில்: ஒராகிள், வளர்ச்சி: சுயமுன்னேற்றம், ஒராகிள் நிறுவுனர். கல்வி: பட்டப்படிப்பு இடைநிறுத்தம்.

### #6 லட்சுமி மிட்டல்



60 வயது இந்தியரும் லண்டனில் வசிப்பவருமான இவரது சொத்து மதிப்பு 31.1 பில். டொலர். தொழில்:இரும்பு உருக்கு, வளர்ச்சி: பிறப்பால், சுயமுன்னேற்றம், கல்வி: பட்டதாரி.

### #7 அமான்ஷியோ ஒரேகா



74 வயது இந்த ஸ்பெயின்காரரின் சொத்து மதிப்பு 31 பில். அமெ டொலர். தொழில்: பஷன் பொருள் உற்பத்தி, வளர்ச்சி: சுயமுன்னேற்றம். கல்வி: குறிப்பிடும்படி இல்லை.

### #8 எக் பற்றிஸ்ரா



54 வயது இந்த பிரேஸில்காரரின் சொத்து மதிப்பு 30 அமெ.டொலர். தொழில்:சுரங்கம் மற்றும்எண்ணெய், வளர்ச்சி: சுயமுன்னேற்றம், கல்வி: பல்கலைக்கழகக் கல்வியை இடையில் நிறுத்தியமை.

### #9 முகேஷ் அம்பானி



53 வயது இந்தியரான இவரது சொத்து மதிப்பு 27 பில்.டொலர். தொழில்:பெட்ரோ கெமிக்கல், ஓயில்,வளர்ச்சி: பிறப்பால், சுய முன்னேற்றம், கல்வி:பட்டதாரி.

### #10 கிரிஸ்ரி வோட்டன்



56 வயது அமெரிக்கரானஇவரதுசொத்து மதிப்பு 26.5 பில். டொலர். தொழில்: வால்மாட் சில்லறை அங்காடி தொகுதி வளர்ச்சி: பரம்பரை உறவுமுறை.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.25 | 110.99 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.86 | 179.07 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 150.09 | 154.34 |
| சுவிஸ் பிராங் | 116.29 | 120.42 |
| கனேடிய டொலர் | 111.20 | 114.92 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.63 | 112.32 |
| சிங்கப்பூர் டொலர் | 85.35 | 87.88 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.44 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.94 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



இலங்கை விமானப் படையின் 60-வது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் விதத்தில் மத்திய வங்கி ரூ.2 முகப்பெறுமதியுடைய நாணயக்குற்றியை கடந்த 2-ம் திகதி வெளியிட்டுள்ளது. இது அடுத்த மாதம் முதல் சுற்றோட்டத்திற்கு விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## செய்தித் துளிகள்...

### யூனியன் வங்கி பங்கு ஒதுக்கீடு

யூனியன் வங்கியின் ஐ.பி.ஓவுக்கு அண்ணளவாக 345 மடங்கு மிகைக்கேள்வி ஏற்பட்டிருந்த நிலையில், தற்போது வங்கி பங்கு ஒதுக்கீடு தொடர்பாக அறிவித்துள்ளது. இதன்படி, வங்கியின் ஊழியர் மற்றும் வாடிக்கையாளர் தவிர்ந்த ஏனைய சகல முதலீட்டாளர்களுக்கும், 5 ஆயிரம் பங்குகள் வரை விண்ணப்பித்தோருக்கு 100 பங்குகளும், 5 ஆயிரம் பங்குகளுக்கு மேல் விண்ணப்பித்தோருக்கு 200 + 0.11% பங்குகளும் ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### சிறு முதலீட்டாளர்களுக்கு 40%

எதிர்வரும் மார்ச் 15-ம் திகதி முதல் நடைபெறும் ஆரம்பபொது வழங்கல்களில் 40 வீதம் தனிப்பட்ட மற்றும் சிறு முதலீட்டாளர்களுக்கும் 10 வீதம் நம்பிக்கை அலகு பொறுப்பாட்சிகளுக்கும் (UnitTrusts) கட்டாயமாக ஒதுக்கப்படவேண்டும் என இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழு(SEC) அறிவித்துள்ளது.

### புதிய பங்குத்தரகர் நிறுவனம்

'நியூ வேல்ட் செக்குரிட்டிஸ் பிரைவட் லிமிட்டட்'க்கு கடந்த 10-ம் திகதி முதல் பங்குத் தரகராக செயற்பட கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் கொ.ப.சந்தையில் செயற்படும் பங்குத்தரகர்களின் எண்ணிக்கை 26ஆக அதிகரித்துள்ளது.




300 மில்லியன் பங்குகளை தலா ரூ.5 வீதம் பிறீ லங்கா கப்பிற்றல் ஹோல்டிங் லிமிட்டட் வழங்கவுள்ளது .இதன் மூலம் ரூ.1.5பில்லியன் மூலதனத்தை அதிகரித்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிதி புதிய நீர்மின்திட்டம், 2 ஹோட்டல் அபிவிருத்தி மற்றும் கொழும்பில் வர்த்தக சொத்து தொகுதி அபிவிருத்தி ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படவுள்ளன. எதிர்வரும்17-ம் திகதி ஆரம்பமாகவுள்ள உத்தியோக பூர்வ பங்கு வழங்கலுக்கு (IPO) எதிர்வரும் ஏப்ரல் 5-ம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் இது தொடர்பாக நிறுவன உயரதிகாரிகள் விளக்குவதைப் படத்தில் காணலாம்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7664.72 | 7313.02 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7029.42 | 6822.16 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 10,052.57 | |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** லங்கா டெவலொப்மன்ட் (61.50) ,பெஸ்ட் கப்பிரல் (23.60),ஒன்லே (70.20),ஜோர்க் ஆர்கட்(40.30),சங்கலங்கா(621.50).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** பிறவுண்ஸ் பீச் (21.50),எல்பி பினான்ஸ்(140.50),நேஷன்ஸ் லங்கா(11.20),கார்டியன் கப்பிரல் (1255.00), சிடிஐசி(167.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு தமிழருவி மணியன் எழுதும் கடிதம்



'ஃபீனிக்ஸ் பறவை தன் சாம்பலில் இருந்து மீண்டும் உயிர்த்தெழும்' என்பது நிஜம் அல்ல. ஆனால், அரசியல் உலகம் அதிசயிக்கும் வகையில் உங்கள் சாம்பல் மேட்டில் இருந்து நீங்கள் உயிர்த்தெழுந்ததுதான் நிஜம். உங்கள் தவறுகளைத் தமிழகத்து மக்கள் மிகவும் பெருந்தன்மையுடன் மன்னித்து மீண்டும் ஆட்சி நாற்காலியில் அமரச் செய்தார்கள். 140 தொகுதிகளில் நின்று 132 தொகுதிகளில் வென்று, தனிப்பெரும் பான்மையுடன் நீங்கள் அரசை அமைத்தீர்கள். உங்களோடு கூட்டணி சேர்ந்தவர்கள் 64 தொகுதிகளில் வெற்றிக்கனியைப் பறித்துச் சுவைத்தனர். ஆடம்பர மணவிழா, 'சகோதரி' சசிகலாவின் குடும்ப அத்துமீறல், டான்சி நிலப் பேரம் என்ற குறைகளை எல்லாம் புறந்தள்ளி 234 தொகுதிகளில் உங்கள் கூட்டணிக்கு 196 எம்.எல்.ஏ-க்களை வழங்கிய வாக்காளர்கள் உங்களிடம் எதிர்பார்த்தது ஒன்றே ஒன்றுதான்... நல்லாட்சி! அவர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நீங்கள் நடந்துகொண்டீர்களா சகோதரி? மருத்துவர் ராமதாஸைப் போல் அரசியல் ஆதாயத்துக்காக 'அன்புச் சகோதரி' என்று நான் அழைக்கவில்லை.

சட்டமன்றத் தேர்தல் 2001இல் நடந்த போது நான்கு தொகுதிகளில் வேட்பு மனுத்தாக்கல் செய்தீர்கள். அது ஒரு தவறான நடவடிக்கை. தேர்தலில் உங்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், அ.தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியதும் நீங்கள் முதல்வராக முயன்றது இரண்டாவது தவறு. கிரிமினல் வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் முதல்வராக முடியாது என்பது சட்டம். ஆனால், உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்து தமிழகத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஃபாத்திமா பீவி உங்களை முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்து அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தினார். தமிழக அரசியல் வரலாற்றில் தேர்தலில் நிற்க முடியாமல் தடுக்கப்பட்ட முதலமைச்சர் நீங்கள் ஒருவரே. ஊழல் குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்ட முதல்வரும் நீங்களே. கலைஞருக்குள்ள சாமர்த்தியம் உங்களுக்கு சாத்தியப்படவில்லை. அதனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்பு நீங்கள் பதவியில் இருந்து விலகிப் பன்னீர்செல்வத்தை முதல்வராக்கினீர்கள். யாருக்கு எப்போது எது கிடைக்கும் என்று யார்தான் அறிவார்? வீதியில் விளையாடிய கரிகாலன் கழுத்தில் யானை மாலையிட்ட கதையை எம் கண் முன்னால் நிகழச் செய்தவர் நீங்கள். நான்கு மாதங்கள் முதல்வர் நாற்காலியில் பன்னீர்செல்வம் அமர்ந்திருந்தாலும், பின்னால் இருந்தபடி பரிபாலனம் செய்தது நீங்கள்தானே சகோதரி!

ஒரு வழியாக சட்டம் எழுப்பிய தடுப்புச் சுவரைத் தகர்த்துவிட்டு, ஆண்டிபட்டி இடைத்தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் நாற்காலியைத் தன்னிடம் தக்கவைத்துக்கொள்வதில் நீங்கள் காட்டிய முனைப்பு, அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர்களுக்குக்கூட எளிதில் கைவராதது! நீங்கள் மீண்டும் ஆட்சியில் அமர்ந்ததே அரிய சாதனைதான். ஆனால், அதன் மூலம் மக்கள் அடைந்த பயன் என்ன? உங்களைச் சிறைக்கு அனுப்பிய கலைஞரை நீங்கள் சிறைக்கு அனுப்ப நாள் குறித்து நள்ளிரவில் கைது செய்து, மக்கள் அனுதாபத்தை அவர் பக்கம் திருப்பும் திருப்பணியில்தானே ஈடுபட்டீர்கள்!

உங்களுக்குப் பிரச்சினை கலைஞர். கலைஞருக்குப் பிரச்சினை நீங்கள். உங்கள் இருவர் கால்களிலும் மாறி

## பரிசோதிக்கப்படாத வாழ்க்கை வாழத் தகுதியற்றது

மாறி மிதிபடுவது மக்கள். 'விதியே, விதியே, தமிழ்ச் சாதியை என் செய்ய நினைத்தாய்?' என்று சரியாகத்தான் புலம்பினான் பாரதி.

உங்களுடைய அசைக்க முடியாத பலம் அபாரத் தன்னம்பிக்கை. அதுவே சில நேரங்களில் வரம்பு கடந்து பிறர் பார்வையில் தலைக்கனமாய் தரிசனம் தரும்படி நடந்துகொள்வதுதான் உங்களது மோசமான பலவீனம். ஜனநாயக அமைப்பில் விமர்சனங்களை ஆரோக்கியமாக நேர்கொள்ளும் தன்மை மிக முக்கியம். தமிழகத்தில் உள்ள ஆறரைக் கோடி மக்களும் பன்னீர் செல்வம், செங்கோட்டையன் போன்று கை கட்டி, வாய் பொத்தி, முதுகு வளைந்து 'அம்மா' என்று ஆராதிக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பதுதான் தவறு. ஊடகங்கள் அனைத்தும் ஒத்தூத வேண்டும் என்ற விருப்பம் கலைஞரைப்போல் உங்களுக்கும் உண்டு. 'இந்து' நாளிதழ் உங்கள் சகிப்புத்தன்மையற்ற நடவடிக்கைகள் குறித்துக் கட்டுரை தீட்டியதற்காக என்.ராம் உட்பட ஆறு பேரை கைது செய்ய முயன்றது சரியான நடவடிக்கையா என்று இப்போது சிந்தியுங்கள். பல்வேறு இதழ்கள் மீது வழக்குப் பதிவு செய்த உங்கள் செயல் பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிரானது இல்லையா?

அரசு ஊழியர்கள் 2003இல் ஓய்வூதியச் சலுகைகளுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது ஒரு துளிமையில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேரை வேலை நீக்கம் செய்ததும், இரவில் வீடு புகுந்து அவர்களைக் கள்வர்கள் போல் கைது செய்ததும், சாலைப் பணியாளர்கள் வாழ்வோடு விளையாடியதும் தான் உங்கள் வீழ்ச்சிக்கு வியூகம் அமைத்ததை இப்போதாவது உணர்ந்துவிட்டீர்களா? அப்போது 'அரசு ஊழியர்களை அழைத்துப் பேச வேண்டும்; அன்பால் சாதிக்க வேண்டும்' என்று உங்களுக்கு அருளுரை வழங்கிய கலைஞருடைய இப்போதைய ஆட்சியில், அதே அரசு ஊழியர்கள் காவல் துறையால் நடுவீதியில் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்பது தனியொரு கொடுமை!

திருமங்கலம் தேர்தல் பாணி குறித்துக் கடுமையாக விமர்சிக்கும் நீங்கள் தான், உங்கள் ஆட்சியில் இடைத்தேர்தல்கள் நடந்தபோது, அமைச்சர்களின் படையெடுப்பை அறிமுகப்படுத்தினீர்கள். சென்னை மாநகராட்சி இடைத் தேர்தலில் விதிமுறைகளை மீறி உங்கள் தொண்டர்கள் செயல்பட்டபோது நீங்கள் வேடிக்கை பார்த்தீர்கள். சாத்தான்குளம் இடைத்தேர்தலில் நிர்வாக எந்திரத்தை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தினீர்கள். வாக்காளர்களுக்கு 'அன்பளிப்பு' தரும் 'ஜனநாயகக் கடமை'யை நீங்களும் செய்தீர்கள். கலைஞரின் குடும்பம் குறித்துப் பேசும்போதெல்லாம், சசிகலா குடும்பம் உங்கள் நினைவில் நிற்பதில்லை. திரைப்பட உலகில் தேவைக்கு மேல் நீங்கள் சொத்து சேர்த்தாயிற்று. உங்களுக்கென்று தனியாக ஒரு குடும்பம் இல்லை. 'தத்துவ ஞானிகள் ஆளவேண்டும். அவர்களுக்குக் குடும்பம் கூடாது' என்றார் பிளேட்டோ. அந்த வரம் உங்களுக்கு இயல்பாக வாய்த்திருந்தது. ஒரு செப்புக் காசும் நேர்மை தவறிச் சேர்க்காமல் ஊழலற்ற நிர்வாகத்தை நீங்கள் நினைத்திருந்தால், தமிழக மக்களுக்குத் தந்திருக்க முடியும். சசிகலா குடும்பம் உங்கள் கால்களை நேர் வழியில் நடக்கவிடாமல் பிணைத்திருக்கும் இரும்புச் சங்கிலி என்று நீங்கள் இப்போதேனும் உணர்ந்தீர்களா?



போகட்டும். உங்கள் 10 ஆண்டு ஆட்சியில் நல்லதே நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. கந்துவட்டிக் கொடுமையில் இருந்து ஏழைகளைக் காப்பாற்றிய நடவடிக்கை, பாமர மக்களின் வாழ்வாதாரத்தைச் சுரண்டிய லாட்டரி சீட்டுக்குத் தடை விதித்த நற் செயல், வீரப்பன் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் வெளிப்படுத்திய துணிச்சல், காஞ்சி சங்கராச்சாரியாரைக் கைது செய்ததில் காட்டிய கண்டிப்பு, மழை நீர் சேகரிப்பில் மக்களை ஈடுபடுத்திய ஆளுமை, கலைஞரால் கை கழுவப்பட்ட வீராணம் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிச் சென்னையின் தாகம் தவிர்த்த ஆட்சித் திறன், தாய்மை உணர்வுடன் தொடங்கிய தொட்டில் குழந்தைத் திட்டம் மூலம் வெளிப்படுத்திய சமூகப் பார்வை, கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவச சைக்கிள் வழங்கிய கருணை போன்றவற்றுக்காக நிச்சயம் நீங்கள் பெருமைப்படலாம். உங்கள் ஆட்சியின் சிறப்பு அம்சமாக மக்கள் மறவாமல் நினைப்பது சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு. கட்சிக்காரர்கள் அதிகாரம் செலுத்தும் கொத்தடிமைக் கூடங்களாக காவல் நிலையங்கள் கழிந்துபோக நீங்கள் அனுமதித்தது இல்லை!

சகோதரி... நீங்கள் மூன்றாவது முறை முதல்வராகும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறீர்கள். வலிமையான கூட்டணி உங்களுக்கு வாய்ப்பாக அமைந்து இருக்கிறது. வாக்காளர்களுக்கு வேறு வழி இல்லை. ஜனநாயகத்தில் நன்மை தீமைக்கு நடுவே போட்டி நடந்தால், மக்கள் நன்மையின் பக்கமே நிற்க விரும்புவார்கள். அதற்கான சூழல் இன்னும் கனியாதபோது, பெரிய தீமையைப் புறந்தள்ளிவிட்டு, சிறிய தீமையைத் தான் அவர்கள் தேர்ந்தெடுக்க இயலும். சாம்பல் மேட்டில் இருந்து நீங்கள் மீண்டும் உயிர்த்தெழ வாய்ப்பு உள்ளது. தேர்தல் களத்தின் ஆதரவுக் காற்றை உங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளும் வாய்ப்பும் இருக்கிறது. அந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடிந்தால்... ஈழத் தமிழர் நலன் காக்க உண்மையான உள்ளுணர்வுடன் நீங்கள் செயற்பட வேண்டும் தமிழகத்தின் ஒரு மீனவரும் கடலில் சாவை சந்திக்காத நிலை வரவேண்டும். இலவசத் திட்டங்கள் என்னும் போர்வையில், ஏழை மக்களை ஏழை மக்களாகவே என்றும் கையேந்தும் இழிநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க நீங்கள் காமராஜர் வழியில் உருப்படியான திட்டங்கள் தீட்ட வேண்டும். டாஸ்மாக்கை அரசுடமையாக்கிய பாவத்தைச் செய்த நீங்கள் பூரண மதுவிலக்கை வழங்க முடியாமற்போனாலும், வீதியெங்கும் பரவியிருக்கும் கடைகளைக் குறைக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஊழலற்ற ஆட்சியைத் தந்து நீங்கள் உயர வேண்டும். சசிகலா சாம்ராஜ்யம் மீண்டும் எழுவதற்கு எந்த நிலையிலும் நீங்கள் இடம் அளித்துவிடலா காது. இந்த முறை நீங்கள் தவறு இழைத்தால்... இனி வாழ்வின் இறுதி வரை ஆட்சி நாற்காலியில் அமர முடியாது என்றே உணர்ந்து செயற்படுங்கள். ஆட்சி மாற்றம் வெறும் காட்சி மாற்றமாக முடிந்துவிடக் கூடாது என்பதுதான் எங்கள் பிரார்த்தனை.

'உழுகலப்பையைப் போல் தாழ்ச்சி கொண்டவன் நான்' என்றார் இயேசு பிரான். பணிவே நீங்கள் அணியும் மிக உயர்ந்த அலங்காரம் என்பதை மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் மட்டுமல்லாது சர்வதேச மட்டத்திலும் எமது வீரர்கள் சாதனை படைப்பர்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பர்ணம்)

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை கடந்த கால யுத்த சூழ்நிலையிலும் கூட தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்கள் உள்ளனர் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு அமைச்சு மற்றும் வட மாகாண விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும் கிரிடா சக்தி விளையாட்டுப்போட்டிகள் நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நீண்டகாலமாக இம் மாவட்டத்தில் விளையாட்டு வீரர்களுக்கும் வீரங்கனைகளுக்கும் கிடைக்காத வாய்ப்புக்கள் தற்போது கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்த கால சூழ்நிலையிலும் கூட இந்த மாவட்ட வீரர்கள் தேசிய மட்டத்திலும் தமது சாதனைகளைப் படைத்து வந்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த் அமைதி நிலையில் தேசிய மட்டத்தில் மட்டுமல்லாது சர்வதேச மட்டத்திலும் தமது சாதனைகளை படைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எமது மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறந்த பயிற்சிகளையும் விளையாட்டு உபகரணங்களையும் வழங்கும் பட்சத்தில் வீரர்களால் மாகாண,தேசிய, சர்வதேச மட்டங்களில் தமது திறமையை வெளிக்கொணர முடியும்.

விளையாட்டு உபகரணங்கள், தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான மாதாந்த வேதனம் என்பன வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட இந்த கிரிடா சக்தி விளையாட்டு செயற்றிட்டம் மூலம் தமது திறமைகளை வெளிக்கொண்டுவர வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

# முல்லைத்தீவில் நீர்ப்பாசனக்குளம் புனரமைப்புத் திட்டம்

## அமைச்சர் பசில் ஆரம்பித்து வைப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடிதாங்கிகுளம் என்னும் பகுதியிலுள்ள நீர்ப்பாசனக்குளம் புனரமைப்புத் திட்டத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவுக்கான விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் பசில் ராஜபக்ஷ நண்பகல் 12 மணியளவில் குடிதாங்கிக்குளம் என்னும் பகுதியிலுள்ள நீர்ப்பாசனக்குளம் புனரமைப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ,

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார்.

தேசிய ரீதியில் 2000 சிறிய குளங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் இந்த நீர்ப்பாசன புனரமைப்புத் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் லியனகே, முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மார்க் ஆகி யோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# பி.பி.சி.ஊடகவியலாளர்கள் மீது லிபிய படையினர் தாக்குதல்

பி.பி.சி ஊடகவியலாளர்கள் மீது லிபிய படையினர் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. லிபியாவின் ஸாவியா நகரில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை கைது செய்த படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

முவம்மர் கடாபியின் படையினர் துப்பாக்கி மற்றும் வேறு ஆயுதங்களைக் கொண்டு தம்மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர் விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் தற்போது லிபியாவை விட்டு வெளியேறியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இராணுவச் சோதனைச் சாவடியில் குறித்த ஊடகவியலாளர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தால் இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்பட்ட பாரிய பூகம்பம் மற்றும் சுனாமியினால் இலங்கையர் எவருக் கும் உயிரிழப்புக்களோ காயங்களோ ஏற்பட்ட தாக தகவல்கள் இல்லை என வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்பு பணியாளர்நாயகம் சரத்திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் உள்ள எமது தூதரகத்துடன் நாம் தொடர்பில் இருப்பதுடன் நிலைமையை விழிப்புடன் அவதானித்து வருகிறோம். இதுவரை இலங்கையர்கள் எவரும் காயமடைந்ததாகவோ கொல்லப்பட்டதாகவோ தகவல் இல்லை என அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜப்பானில் ஏற்பட்ட 8.9 ரிக்டர் அளவிலான பூகம்பத்தினால் ஆயிரத்திற்கும் அதிகமானோர் இறந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் உள்ள இலங்கையர்களின் நிலைமை குறித்து அவர்களின் உறவினர்கள் அறிந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு 24 மணித்தியாலங்களும் இயங்கும் தகவல் பீடம் ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.


ஜப்பானில் உள்ள இலங்கையர் குறித்த தகவல்களை அறிய 011-4719593,011-5743362,077-2267929(24 மணித்தியாலயங்கள்) ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமாக தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

அமரர்
இராமலிங்கம் திருவாதிரை
(முகாமைத்துவப் பணிப்பாளர் ஸ்ரீ திருப்பதி (பிறைவேட்) லிமிடெட்
கண்ணீர் அஞ்சலி

தோழனாய் எம்முடன்
தோள் தந்து
தோல்விகளை தினம்
வெற்றியாக்கி
தேடினீர் நற்பெயர்
பிறப்பு உண்டேல்
இறப்பும் உண்மையே!
உம் பிரிவு இவ் உலகிற்கு
பெரும் இழப்பே!

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ வெங்கடேஸ்வரா றேடர்ஸ்
இல.589, 591, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 2224579
(சி-2680)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையே இனிமையான எதிர்காலங்களை உருவாக்குகிறது.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யப்பானிய மக்களுக்கு தமிழ் மக்களின் அனுதாபச் செய்தி

அன்புமிகு யப்பானிய மக்களுக்கு, நேற்று முன்தினம் உங்கள் நாட்டில் இடம்பெற்ற பூமியதிர்ச்சி, சுனாமி ஆகிய இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட இழப்புகளை அறிந்து தமிழ் மக்களாகிய நாம் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைகின்றோம்.

இயற்கை நடத்திய கோர தாண்டவத்திற்கு உங்கள் உடன் பிறப்புக்களை பறிகொடுத்தமை வேதனையிலும் வேதனை.

உயிரிழப்புக்களின் வலியை அனுபவித்துக் கொண்டிருக்கும் எங்களால் உங்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்களின் தாக்கம் எத்தகையது என்பதை எங்களால் நன்றாக புரிந்து கொள்ள முடிகின்றது.

நீங்கள் தொழில்நுட்பத்தின் படைப்பாளிகள், கடின உழைப்பிற்கு நிகர் எதுவுமில்லை என்ற வாசகம் உங்களுக்கானதே.

நேரத்தைப் பொன்னாக மதிக்கும் உங்களின் சுறுசுறுப்பும், நேர முகாமைத்துவமும், தொழில்நுட்பத்திறனும் தமிழ் மக்களாகிய எங்களின் மதிப்புக்குரியன.

நேரத்தை வீண்விரயம் செய்யக்கூடாது என்பதற்காக உங்கள் நாட்டின் தேசிய கீதத்தை நான்கு வரிகளில் அமைத்துக்கொண்டீர்கள்.

நாங்கள் இப்போதுதான் தேசிய கீதத்தை தமிழில் படிப்பதா? சிங்களத்தில் படிப்பதா? என்ற இழுபறியில் இறங்கியுள்ளோம்.

எங்கள் நாடு சுதந்திரம் அடைந்ததாக கூறப்பட்டு 60 ஆண்டுகள் கடந்த நிலையில் தான் 'தேசிய கீதத்தை' எந்த மொழியில் பாடுவது என்ற சிக்கல் எழுந்துள்ளது.

இதற்கு மேலாக ஏகப்பட்ட கொடிகளும், கீதங்களும் எங்களுக்குச் சொத்தாக உள்ளன.

சுருங்கக்கூறின், இலவச பாடநூலுக்கு, மர நடுகைக்கு, மாடு கையளிப்பதற்கு என்றெல்லாம் கீதங்கள் எழுதி இசையமைத்து வைத்துள்ளோம். அந்தளவிற்கு எங்களுக்கு நேரம் தாராளம்.

ஆனால் நீங்கள் அப்படியல்ல, அணுக்குண்டுகளின் வீச்சில் வெந்தணலாய் கிடந்த மண்ணை உலகின் உன்னத பூமியாக மாற்றிய சாதனையாளர்கள்.

உங்கள் மீது எங்களுக்கு எந்தக் காழ்ப்புணர்வும் கிடையாது. ஆனால் எங்கள் மீது உங்களுக்கு ஏதேனும் மனத்தாக்கம் உண்டா என்பதை அன்பர் அகாஷியைக் கேட்டால்தான் தெரியும்.

எதுவாயினும் உங்கள் மண்ணில் ஏற்படுத்திய இயற்கை அனர்த்தம் பற்றி இங்கெல்லாம் கதை. உங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்காக கண்ணீர் வடிக்கின்றோம்.

ஓ இறைவா! யப்பான் நாட்டு மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு உதவுக. உறவுகளை இழந்து தவிக்கும் அவர்களுக்கு மன ஆறுதலை அளித்தருளும்.

# பிரி. ஆட்சிக்கால வர்த்தமானியை இரத்துச் செய்ய அரசு தீர்மானம்

(கொழும்பு)

1818ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சியின்போது ஆளுநர் சேர் றொபேட் பிறவுனிங்கினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களை தேசத்துரோகிகள் என இந்த வர்த்தமானி கண்டித்ததுடன் பிரித்தானியர்களின் ஆட்சிக்கு எதிராக கிளிர்ச்சி நடத்துபவர்களின் சொத்துக்கள் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்குமுன் பல அரசாங்கங்கள் மேற்படி வர்த்தமானியை ரத்துச் செய்வதற்கு விரும்பியபோதிலும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

1818ஆம் ஆண்டு ஊவா -வெல்லஸ்ஸ பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சியே பிரித்தானியர்களிடமிருந்து நாட்டை விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சி எனக் கூறப்படுகிறது. கெப்பிற்றிபொல திசாவையின் தலைமையில் இக்கிளர்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பல பிராந்திய தலைவர்கள் இக்கிளர்ச்சிக்கு ஆளணி மற்றும் பொருட்களை வழங்கினர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பூட்டனாரான வணிகசிந்தாமணி மொஹோத்தி டொன் டேவித் ஹென்ரிக், இக்கிளர்ச்சியின்போது றுகுணு (அம்பாந்தோட்டை -எம்பிலிப்பிட்டிய பிராந்தியம்) பிராந்தியத்திற்கு தலைமை தாங்கி ஆளணி மற்றும் பொருட்களை விநியோகித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களின் சொத்துக்களை பிரித்தானிய அரசாங்கம் பறித்தது மாத்திரமல்லாமல், 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவரையும் கொலை செய்து அவர்களின் பசுக்கள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளையும் அழித்து, வயல்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

தற்போதைய உத்தேசதிட்டத்தின்படி மேற்படி கிளர்ச்சியில் பங்குபற்றியவர்கள் தேசிய வீரர்களாக அங்கீகரிக்கப்படவுள்ளனர். அவர்களை தேசிய வீரர்களாக பிரகடனப்படுத்தும் சான்றிதழ்கள், அவர்களின் சந்ததியினரிடம் மே 22 ஆம் திகதி இலங்கையின் குடியரசு தினத்தில் நடைபெறவுள்ள வைபவமொன்றில் வைத்து கையளிக்கப்படவுள்ளது. (எ-1)

# அரசை விமர்சித்த தமிழர்கள் சொந்த வீட்டுக்கு செல்கின்றனர்

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகளை விமர்சித்த புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் தற்போது வடக்கு கிழக்கில் உள்ள தமது சொந்த வீடுகளுக்குச் சென்று வருவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை பிரதிநிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் படைத்தரப்பின் 58வது பிரிவுக்கு தலைமை தாங்கிய மேஜர் சவேந்திர சில்வா கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கின்ற முயற்சியில் அரசாங்கம் வெற்றி பெற்றிருக்காவிட்டால் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை இலங்கையில் நடத்தும் வாய்ப்பு கிடைக்காது போயிருக்கும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் நந்திக் கடலேரிப் பகுதியில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதால்தான் சர்வதேச நிகழ்ச்சிகளை இலங்கையில் நடத்த முடிகிறது. இச் சுதந்திரமான நிலைமையை படைத்தரப்பினரே உருவாக்கியுள்ளனர். இதனால் குமார் சங்கக்கார தலைமையிலான கிரிக்கெட் அணியினர் போட்டிகளில் தமது முழுக்கவனத்தையும் செலுத்த முடிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மரபு வழியில் போரிடும் ஆற்றலையும் மற்றும் கடல் வான் கலங்களையும் முற்றாக இழந்துவிட்டனர். அவர்களால் நீண்டகாலத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த முடியாது என அவர் இச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை 2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் கொழும்பில் சார்க் மாநாடு நடைபெற்றபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்கள் இருந்த காரணத்தினால் இந்தியா தமது போர்க் கப்பலை கொழும்புக் கடலில் நிறுத்த வேண்டியிருந்ததாக இன்னொரு படையதிகாரி கூறியு ள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் இருந்த காலங்களில் அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் இலங்கையில் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ள மறுத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# உள்ளூராட்சி சபை தேர்தல் வன்முறை 367 ஆக உயர்வு

ஐக்கிய தேசிய கட்சி சார்பில் பியகம பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் டெஸ்மன் பெரேரா மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் வேட்பாளர் டெஸ்மன் பெரேராவிற்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் 367 ஆக உயர்வடைந்துள்ளதாக சுதந்திரமானவும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது. இதில் மூன்று கொலை சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக அந்த இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார். (ச)

# தெய்வீகப் பேருரை

வண்ணார்பண்ணை நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று காலை 7 மணிமுதல் விசேஷ சங்காபிசேஷகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் காலை 11.00 மணியளவில் சைவசமயம் காட்டும் வைரவர் வழிபாடு எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்பி அருளானந்தனின் தெய்வீகப் பேருரை இடம்பெறும். (ச)

# சோதனைகளை இறைமொழி கொண்டு வெற்றி பெறுவோம்

இயேசு தம் இறையாட்சிப் பணியைத் தொடங்கவிருக்கிறார். அதற்கு முன் இயேசு பாலைநிலத்தில் சோதிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சியை மாற்கு சுருக்கமாகவும், மத்தேயு, லூக்கா விரிவாகவும் தந்துள்ளனர். (மாற் 1:12-13, மத் 4:1-11, லூக் 4:1-13). பொதுவாகப் பாழடைந்த ஓர் இடமாக இருந்த அப்பாலைநிலத்தில் கள்வர் நடமாடினர், அசுத்த ஆவிகள் குடிகொண்டிருந்ததாக மக்கள் நம்பினர். இயேசுவும் அங்கேதான் "அலகையால்" சோதிக்கப்படுகிறார்.

தம்மைச் சக்திவாய்ந்த மந்திரவாதியாக எண்ணும்படி கல்லை அப்பமாக்கும் சோதனை இயேசுவுக்கு வருகிறது. தம் உயிருக்கு ஆபத்துவரும் என்றாலும் கடவுள் தம் வல்லமையைக் காட்டட்டுமே என்னும் மூடத் துணிச்சல் கொள்ள அவருக்கு கோவில் உச்சியிலிருந்து கீழே குதிக்கும் சோதனை வருகிறது. உலக செல்வங்களை நல்வழியிலோ தீயவழியிலோ பெற்றிடலாம் என்று அலகையை வணங்குவதற்கான சோதனை வருகிறது. இருப்பினும் சோதனையின் போது கடவுளின் உடனிருப்பை இயேசு ஒருகணமேனும் மறக்கவில்லை.

நமக்கு நன்கு அறிமுகமான இயேசுவின் இந்த மூன்று சோதனைகளையும், அந்த சோதனைகளை இயேசு எப்படி வெற்றிகொண்டார் என்பதையும் இன்று திருச்சபை நமக்கு சிந்தனைப் பொருளாகத் தருகிறது. மனிதராகப் பிறந்த அனைவரும் சோதனைக்குட்பட வேண்டும் என்பதை காட்டுவதற்கு பாவமே அறியாத இயேசு சோதனைகளைச் சந்திக்க முன்வந்தார். உடல் தேவைகளை நிறைவு செய்தல், உலகப் பொருட்கள் மீது பற்றுகொள்தல், இறைவனுக்கு எதிராகச் செயல்படுதல் என்னும் மூன்று தளங்களில் இயேசு சோதிக்கப்பட்டார். நமக்கும் இந்த மூன்று தளங்களிலும் சோதனைகள் வரும்.

இச்சோதனைகளை வெல்ல அலகையின் ஆற்றலை முறியடிக்க இயேசு கையாண்ட ஆயுதம் என்ன? இறைவார்த்தைதான் மூன்று சோதனைகளிலும் இயேசு (இ.ச 8:3, தி.பா 91:12, இ.ச 6.13) இந்த இறைவார்த்தையின் மேற்கோள்களைப் பயன்படுத்தி அலகையின் சோதனையை வெல்லுகிறார். அந்த வார்த்தைகளைச் செயல்பாடாக்கினார். தந்தை இறைவன்மீது அவருக்கு தன் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். நாமும் நமது சோதனைகளை வெல்ல இந்த மூன்று உத்திகளையும் பயன்படுத்துவோம். இறைவார்த்தையைக் கொண்டும், இறைநம்பிக்கையைக் கொண்டும் நம்சோதனைகளை வெல்வோம்.



அலகையின் சோதனைக்கும் தந்திரங்களுக்கும் பலியாகாது நம்மை காக்கும் போது, வான தூதர்கள் நமக்குப் பணிவிடை செய்வார்கள். விவிலிய

### பரமபிதா காட்டிய பாதை

அறிவு கடவுளோடு நமக்குள்ள நெருக்கத்தை அதிகமாக்கும். இந்த நெருக்கமே அலகையை, அதன் ஆதிக்கத்தை நம்மிலிருந்து எளிதில் அகற்றிவிடும். சோதனை வேளைகளில் இயேசுவைப் போல இறைமொழி கொண்டு வெற்றிபெற விவிலியம் தினமும் வாசிப்போம். இயேசுவோடுள்ள நெருக்கத்தை அதிகமாக்குவோம். அலகை எம் வாழ்விலிருந்து அகற்றுவோம்.

ம.பிரான்சிஸ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பெரும் போரில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி







வடக்கின் பெரும்போரில் யாழ்.மத்திய கல்லூரி அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி தொடர்ச்சியாக 5ஆவது வருடமும் வெற்றியை பதிவு செய்தது.

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட மூன்று நாள் கிரிக்கெட் போட்டி கடந்த 10ஆம் திகதி ஆரம்பமாகியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் சென்.ஜோன்ஸ் கல்லூரியினை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதற்கிணங்க களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்ஸில் 118 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் 131 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து 13 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தினை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் நாள் ஆட்டநேரமுடிபில் 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை இழந்திருந்தது.

தொடர்ந்து இரண்டாம் நாள் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தொடக்க விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்து தவித்தது. இருந்தும் பின்வரிசை வீரர்களின் நிதானமான கைகொடுப்பு ஆட்டத்தினால் ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்நிலையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களை எடுத்தது. இதில் டக்ஸன் அரைச் சதம் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி தொடக்கத்தில் சிறப்பாக ஆடிய போதும் பின்வரிசையில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தவித்தது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் 127 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்திருந்தது.



படங்கள் :- சுரேன், சுரேஸ்

மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் ஆரம்பமானதும் முதலாவது ஓவரிலேயே யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஜெரிக் துசாந்த் 31 ஓட்டங்களையும் , கோகுலன் 20 ஓட்டங்களையும், வதூஸனன் 15 ஓட்டங்களையும், டர்வின் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக ஹரிவதனன் 50 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் டக்ஸன், பிரியதர்சன், விஜிகரன் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

வடக்கின் பெரும்போரில் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் எட்வேர்ட் எடினும் , சிறந்த பந்துவீச்சாளர் மற்றும் போட்டியில் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அணித்தலைவர் ஜெரிக்துஷாந்த்தும், சிறந்த களத்தடுப்பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் றஜீந்தனும், சகலதுறை ஆட்டக்காரராக சென்.ஜோன்ஸ் கல்லூரியின் டக்ஸனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மைக் 1...2...3...

## பங்களாதேஷ் அணி எப்போதும் திறமையானது

### பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல் ஹசன்,

இங்கிலாந்து அணியை வெற்றி கண்டது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக உள்ளது. இதை நாங்கள் சாதாரண வெற்றியாக கருதவில்லை.

கடுமையான சூழ்நிலையில் நாங்கள் இங்கிலாந்து அணியை வீழ்த்தியிருக்கிறோம்.

இந்த வெற்றியை நாங்கள் மட்டும் அல்ல, நாடே கொண்டாடுகிறது. இங்கிலாந்தை 225 ஓட்டங்களில் கட்டுப்படுத்தி விட்டால் வெற்றி பெற்று விடலாம் என்றே நினைத்தோம்.

ஆனால் இடையில் நாங்களும் தடுமாறி விட்டோம். ஆனாலும் கடைசி நேரத்தில் எங்களுக்கு வெற்றி கிடைத்தது. இந்த வெற்றிக்கு எங்களுடைய பந்துவீச்சு தான் முக்கிய காரணம்.

குறைந்த ஓட்டங்களில் அவர்களை கட்டுப்படுத்தியது எங்களுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. சில போட்டிகளில் நாங்கள் தோல்வியடைந்திருந்தாலும் இங்கிலாந்து அணியுடனான வெற்றி எங்களுக்கு பெரும் ஆறுதலைத் தருகிறது.

நாங்களும் சாதாரண அணி அல்ல, திறமையான அணி என்பதை இந்த வெற்றி மூலம் நிரூபித்து இருக்கிறோம். உலகக் கிண்ணத் தொடரில் பிரகா



சிக்க வேண்டும் என்று நாங்கள் கடுமையாக உழைத்தோம். அதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

பங்களாதேஷ் அணி எந்த நேரத்திலும் நல்ல நிலையில் ஆடுவோம் என்பதை இந்தப் போட்டி வெளிப்படுத்தியுள்ளோம் என அணித்தலைவர் சகிப் அல் ஹசன் தெரிவித்தார்.

## வில்சனுக்கு தவறான தீர்ப்பு

## அயர்லாந்து அணித்தலைவர் கடுப்பு

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் அயர்லாந்து அணி 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

இப்போட்டியில் அயர்லாந்து அணி 35 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

அதன்பின்னர் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் விழ தொடங்கியது. இக்கட்டான நேரத்தில் அணியின் முன்னணி வீரரான வில்சன் 61 ஓட்டங்கள் எடுத்த நிலையில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ஆனால் வீடியோ மீள்பார்வையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழப்பு இல்லை என்பது தெரியவந்தது.

நடுவர் அசோக டி சில்வாவின் தீர்ப்பை வில்சன் மேல்முறையீடு செய்தார். ஆனால் வில்சனின் ஆட்டமிழப்பு சரிதான் என இறுதி முடிபு தெரிவிக்கப்பட்டது. அயர்லாந்து அணி தோல்வியைத்தழுவ இந்த ஆட்டமிழப்பு முக்கிய காரணமாக அமைந்தது.

இது குறித்து அயர்லாந்து அணித்தலைவர் போட்டர்பீல்ட் கூறுகையில்,

வீடியோ மீள்பார்வையில் பந்து விக்கெட்டை எந்த விதத்திலும் தாக்குவதாகத் தெரியவில்லை. அப்படியிருந்து அவுட் கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நடுவர்கள் ஆலோசித்த நேரம் எடுத்துக் கொள்ளாமலே முடிபை அவசரமாக எடுத்துவிட்டனர். இருந் தாலும் இது தவறான முறையில் வழங்கப்பட்ட ஆட்டமிழப்புத்தான் என அயர்லாந்து அணித்தலைவர் தெரிவித்தார்.

### காமெடி இல்லை

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் காயம் காரணமாக விலகிய பிராவோ இடத்தை நிரப்ப முடியாமல் வீரர்கள் தவித்துவருகிறார்கள். அடிக்கக்கூட ஆள் சேர்த்து விடலாம் ஆனால் வீரர்கள் அறையில் இருக்கும் இறுக்கத்தை தணிக்க தகுந்த நேரத்தில் காமெடி செய்ய இப் போது பிராவோ இல்லாததால் நாங்கள் அனைவருமே தவித்துப் போய் உள்ளோம் என்றார் அணித் தலைவர் சமி.

### ஸ்மித்துக்குதான் டான்ஸ்

அயர்லாந்து பந்து வீச்சாளர் ஜோன்சன் விக்கெட் வீழ்த்தியதும் போடும் ஆட்டம் பிரசித்தி பெற்றது. கால்களை ஒடுக்கி விரித்து ஆடும் இந்த ஆட்டத்தை சிக்கன் டான்ஸ் என்று கூறினார்கள்.

இது பற்றி அவர் கூறும்போது, இனி முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தினால் மட்டுமே நடனம் ஆடுவேன். தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தில் சிமித்தை ஆட்டம் இழக்கச்செய்தால் கண்டிப்பாக ஆட்டம் உண்டு என அவர் தெரிவித்தார்.

## விக்டோரிக்கு ஓய்வு

(மும்பை)

கனடா அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில், நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரிக்கு ஓய்வு வழங்கப்படுகிறது.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது. இதில் மும்பையில் இன்று நடக்கும் 'ஏ' பிரிவு லீக் போட்டியில் நியூசிலாந்து–கனடா அணிகள் மோதுகின்றன.

இப்போட்டியில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக, நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரிக்கு ஓய்வு வழங்கப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதி பல்லேகலயில் நடந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியின் போது விக்டோரியின் முழங்காலில் காயம் ஏற்பட்டது.

இதனால் டானியில் விக்டோரி எதிர்வரும் 18ஆம் திகதி மும்பையில் நடைபெறும் இலங்கை அணிக்கு எதிரான லீக் போட்டியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்தது தென்னாபிரிக்கா

# விழுந்தது இந்திய அணி

(நாக்பூர்)

ஸ்ரையனின்விக்கெட்வேட்டைகைகொடுக்க தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

சச்சின் டெண்டுல்கர் சதமடித்தும் சொந்த மண்ணில் இந்திய அணிக்கு சோகம்.

10வது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறுகிறது.

இதில் நாக்பூரில் நேற்று நடைபெற்ற 29வது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த இந்திய - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இப் போட்டியில் இந்திய அணியின் பியூஸ் சாவ்லாவுக்கு பதிலாக முனாப் பட்டேலும், தென்னாபிரிக்க அணியில் இம்ரான் தாகீருக்கு பதி[illegible]க போத்தாவும் இடம்பெற்றனர்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக்–டெண்டுல்கர் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர். இதில் ஸ்ரையன் வீசிய் ஆட்டத்தின் முதல் பந்திலேயே பவுண்டரி அடித்த சேவாக் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தார்.

மோர்கல் வீசிய ஓவரில் ஆட்டமிழப்பு வாய்ப்பிலிருந்து தப்பிய சேவாக் 44 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் டெண்டுல்கரும் 33பந்துகளில் அரைச்சதம் அடித்து அசத்தினார்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 17.4ஓவர்களில் 142ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த போது சேவாக் 66 பந்துகளில் (12பவுண்டரிகள் உட்பட) 73ஓட்டங்களை எடுத்து பிளஸிஸ் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கருடன் இணைந்த காம்பீர் சிறப்பாக ஆட இந்திய அணி 30.2 ஓவர்[illegible]ளில் 200ஓட்டங்களைத் தாண்டியது.


இதில் சச்சின் டெண்டுல்கர் 92 பந்துகளில் சர்வதேச ஒரு நாள் போட்டி அரங்கில் 48வது சதத்தைப் பூர்த்தி செய்தார். இது அவரது 6வது உலகக் கிண்ண சதமாகும்.

மறுமுனையில் கௌத்தம் காம்பீர் 59பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

## பவர் பிளேய் ஏமாற்றியது

துடுப்பாட்ட பவர் பிளேயை தேர்வு செய்த இந்திய அணி ஓட்டங்களைக் குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விக்கெட்டுக்களையே அடுத்தடுத்து பறிகொடுத்தது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 101 பந்துகளில் (8பவுண்டரிகள், 3சிக்ஸர்கள் உட்பட) 111 ஓட்டங்களுடன் மோர்கலின் பந்தில் ஆட்டமிழந்தார்.



## ஸ்ரையன் மிரட்டல்

தொடர்ந்து வேகத்தில் அசத்திய ஸ்ரையன் பந்தில் காம்பீர் 75பந்துகளில் (7பவுண்டரிகள் உட்பட )69ஓட்டங்களுடனும், அடுத்து வந்த இர்பான்பதான் பூச்சியத்துடனும் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் 5வது விக்கெட்டுக்காக இணைந்த யுவராஜ்சிங் –தோனி ஜோடி நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

இதில் யுவராஜ் சிங் 12ஓட்டங்களுடன் ஜக்கலிஸின் பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஹோலி ஒரு ஓட்டத்துடன் பீற்றர்சனின் சுழலிலும் வெளியேறினார்.

பின் வரிசையில் ஹர்பஜன் 3ஓட்டங்களுடன் ஸ்ரையனின் வேகத்தில் ஆட்டமிழந்தார். அடுத்து சகீர்கான் பூச்சியத்துடன் பீற்றர்சனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஆட்டத்தின் 48வது ஓவரை வீசிய ஸ்ரையன்; நெகரா, பட்டேலை பூச்சியத்துடன் அடுத்தடுத்து வெளியேற்ற இந்திய அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 296ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 21பந்துகளில் 12ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 9.4ஓவர்களில் 50 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக் களையும், பீற்றர்சன் 2 விக்கெட்டுக்களையும், மோர்கல், கலீஸ், பிளசிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும்வீழ்த்தினர்.

பதிலுக்கு 50ஓவர்களில் 297ஓட்டங்களை எடுத்தால் வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு சிமித்–அம்லா ஜோடி பொறுப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி 8.3 ஓவர்களில் 41ஓட்டங்களைச் சேர்த்த போது அணித்தலைவர் சிமித் 16ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அம்லாவுடன் இணைந்த கலிஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார். இதில் அம்லா 58பந்துகளில் அரைச்சதம் பெற தென்னாபிரிக்க அணி 22.2 ஓவர்களில் 100ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 86ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது ஹசிம் அம்லா 72பந்துகளில் (5பவுண்டரிகள் உட்பட) 61ஓட்டங்களை எடுத்து ஹர்பஜன் சுழலில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கலிஸ்–டிவில்லியஸ் இணைந்து ஓட்டங்களை விரைவாக எடுத்து தென்னாபிரிக்க அணிக்கு பலம் சேர்த்தனர். இதில் ஜக்கலிஸ் 66பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

எனினும் கலீஸ் 88 பந்துகளில் (4பவுண்டரிகள் உட்பட) 69ஓட்டங்களை எடுத்து ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டுமினி நிதானமாக ஆட மறுமுனையில் டி வில்லியஸ் 38பந்துகளில் அதிரடியாக அரைச்சதம் அடித்தார்.

எனினும் டி வில்லியஸ் 39பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒருசிக்ஸர்உட்பட)52ஓட்டங்களை எடுத்து ஹர்பஜனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து டுமினியை 23ஓட்டங்களுடன் ஹர்பஜன் வெளியேற்ற தென்னாபிரிக்க அணி 42.3ஓவர்களில் 238ஓட்டங்களை எடுத்து 5விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து வான்விக் 5ஓட்டங்களுடன் பட்டேலின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க சற்று தடுமாற்றமடைந்தது தென்னாபிரிக்க அணி.

எனினும் அடுத்து களமிறங்கிய போத்தா 2பவுண்டரி, ஒரு சிக்ஸர் என விளாச தென்னாபிரிக்க அணிவெற்றியை நெருங்கியது. எனினும் போத்தா 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 12 பந்துகளில் 17 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையிலிருந்த தென்னாபிரிக்க அணிக்கு சகீர்கான் 49ஆவது ஓவரில்4ஓட்டங்களைமட்டுமேவிட்டுக்கொடுத்தார்.

## 6 பந்தில் 13 ஓட்டங்கள்

கடைசி ஓவரில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. நெகரா ஓட்டங்களை வாரி வழங்கினார்.

ஓவரின் முதலாவது பந்தில் பீற்றர்சன் பவுண்டரி அடிக்க பரபரப்பு அதிகரித்தது. அடுத்த பந்தில் பீற்றர்சன் சிக்ஸர் விளாசினார். 3ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்தார். நான்காவது பந்தில் மீண்டும் பவுண்டரி அடிக்க தென்னாபிரிக்க அணி 49.4 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 300 ஓட்டங்களைக் குவித்து 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் டு பிறஸில் 25 ;பீற்றர்சன் 18 ஓட்டங்களையும் ஆட்டமிழக் காமல் எடுத்தனர்.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றி நாயகனாக ஜொலித்த ஸ்ரையன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி காலிறுதி வாய்ப்பை தக்க வைத்தது.




# புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

## பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| நியூசிலாந்து | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +1.848 |
| பாகிஸ்தான் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +0.760 |
| அவுஸ்திரேலியா | 3 | 2 | 0 | 0 | 1 | 5 | +1.813 |
| சிம்பாவே | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.690 |
| கனடா | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -2.083 |
| கென்யா | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -3.403 |

## பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| தென்னாபிரிக்கா | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +1.352 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| பங்களாதேஷ் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -1.241 |
| அயர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.444 |
| நெதர்லாந்து | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -2.728 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு காண்பதற்...

ளோம். வன்செயலின் முடிவு அவ்வாறான ஒரு தீர்வுகாணப்படுவதற்கான வாய்ப்பை வழங்கி இருக்கின்றது என்றும் அவ் வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என்றும் நாம் பலமாக வலியுறுத்தியுள்ளோம்.

எமது நிலைப்பாட்டுக்கு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பலமான ஆதரவு இருக்கின்றது. தற்போது நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் தமிழ் மக்கள் தங்களுடைய ஜனநாயகத் தீர்ப்பின் மூலம் எமது நிலைப்பாட்டை அங்கீகரிப்பதற்கான வாய்ப்பை வழங்கியிருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உடனடித் தேவைகளைக் கவனிக்கவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காணவும் அரசாங்கம் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளைநடத்திக்கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் தேவைகள் பற்றிய தெளிவான புரிந்துணர்வுடனும் ஆழமான உறுதிப்பாட்டுடனும் இப் பேச்சுவார்த்தைகளில் நாம் பங்குபற்றி வருகின்றோம்.

எமது முயற்சியை ஜனநாயக தீர்ப்பு மூலம் ஆதரித்து பலப் படுத்த வேண்டும் என்று நாம் தமிழ் மக்களை வேண்டிக்கொள்கின்றோம்.

அண்மையில் முடிவுக்கு வந்த யுத்தம், ஆரம்பமாவதற்கு முன்பு நடந்தவை, யுத்தத்தின் போது நடந்தவை, யுத்தம் முடிந்த பின்னர் நடந்தவை குறிப்பாக பல்வேறு மக்கள் மத்தியில் உண்மையான நல்லிணக்கத்தைக் காணும் முயற்சி ஆகியன உண்மை மற்றும் பதில் கூறும் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிலைத்து நிற்கக் கூடியதும், ஏற்றுக் கொள்ளக் கூடியதும், நியாயமானதுமான அரசியல் தீர்வு ஒன்றை தமிழ்ப் பிரச்சினைக்கு காண வேண்டியது அவசரமும் அத்தியாவசியமானதுமாகும்.

இந்த இலட்சியத்தை அடைவதற்கு தமிழ் மக்கள் மற்றும் அனைத்து அரசியல் சக்திகளும் ஐக்கியப்பட்டு பரிபூரண ஆதரவை வழங்க முன்வரவேண்டும் என்று நாம் வேண்டுகிறோம்.

இந்த இலட்சியத்தை அடைவதற்குத் தேவையான நேர்மை மற்றும் பொது அர்ப்பணிப்புடன் கூடிய தார்மீக பலமற்ற எந்த அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடாது என்று நாம் வேண்டுகின்றோம் என்றுள்ளது. (ச-5)

# சர்வதேச விசாரணையை...

வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இவ்வுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெள்ளைக் கொடி விவகாரம் முற்றிலும் பொய்யானது. அரசாங்கத்துக்கு எதிராகவோ அல்லது எந்தவொரு அரச அதிகாரிகளுக்கு எதிராகவோ எவரேனும் சாட்சியங்களை வைத்திருந்தால் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் வழங்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு, சர்வதேசமன்னிப்புச்சபை, மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் ஆகியவற்றை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க அழைத்திருந்த போதிலும் அவர்கள் மறுத்துவிட்டனர்.

என்மீது போர்க் குற்றச்சாட்டுகளை சுமத்த சில அமைப்புகள் முயற்சிக்கின்றன.

எந்த வொரு அரசாங்க அதிகாரியையும் சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு கொண்டு செல்வதற்கு நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது இதுதான் முதற்தடவை அல்ல. இப்போது ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் கூட இரண்டு பெண் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்துக்கு எதிராக உரையாற்றியுள்ளனர்.

சில வெளிநாடுகளும் சர்வதேச உதவி நிறுவனங்களும் விரும்புவது போன்று இலங்கை பாதுகாப்பு அமைச்சை கலைத்து விட முடியாது என அவர் அவ்வுரையில் மேலும் கூறியுள்ளார். (ச-5)


**PRINCESS OF WALES NURSING HOME**


132,Kokulam Kachcheri Nallur Road,Jaffna, Srilanka.
Phone- +94 (21)2226179, +94 (21)2226180
Email: princesshosp@gmail.com

இருதய நோய் வைத்திய நிபுணர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதன் கிழமையிலும் காலை 10.00 மணிமுதல்12 மணிவரை நோயாளர்களைப் பார்வையிடுவார்.



20.03.2011 முதல் கண் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் கண் நோயாளர்களைப் பார்வையிடுவார். (அ-2684)


## 12 ஆவது ஆண்டு நினைவு



தோற்றம் 01 01 1922

மறைவு 23 02 1999

**ஸ்ரீமான் சின்னையா நல்லையா**
(6ஆம் வட்டாரம் மண்டைதீவு)
(திதி: மாசிமாதத்து பூர்வபட்ச அட்டமி)

மறைவினில் பன்னிரண்டு ஆண்டுகள்
மாறுமோ உங்கள்நினைவலைகள்
நித்தமும் நினைப்போம் ஐயா!
எங்கள் இதயத்தில் இருத்தி
ஆராதனை செய்வோம்

21/3A இந்து மகளிர் ஒழுங்கை
கந்தர்மடம்.

குடும்பத்தினர்


**Special Fare for LONDON Student**

COLOMBO/ LONDON
Rs.39,000
With Student ID

Further Contact:
METRO TRAVELS & TOURS (PVT) LTD
62/33, Stanley Link Rd, Jaffna.
Tel:- 0215673555/666. (3978)

**CALL SERVICE**
T.P : 021-222 4459, 0774192275

Computer,(Laptop, Desktop), TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்களை உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

**COMPUTER FOR SALE**
T.P : 021-222 4459, 0774192275

Intel Dual Core 2.00 GHz
Intel LGA Mother Board
Ram DDR II, 1GB
Hard Disk Sata 80 GB
Samsung DVD Writer
ATX Casing with Power Supply
15" HP / Compaq LCD Monitor
Multi M.Keyboard, Optical Mouse,
2.1 Laptop Woofer
இவை அனைத்தும் ரூபா: 25800/=
Six Months Warranty

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.

CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

8 STUDENTS IN A BATCH

Ms Office, DTP, Hardware Technology, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன. பாடசாலை மாணவர்கள் தொழில் புரிபவர்களுக்கென விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

சான்றிதழ்கள் அனைத்தும் பரீட்சை முடிவுகளின் பின்னர் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்.

DURATION 1 MONTH, RS. 1000/-
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

**காணி விற்பனைக்குண்டு**

மானிப்பாய் சந்தியில் இருந்து 100 M தொலைவில் சுந்தர்சன் நிறுவனத்திற்கு அருகில் 2 பரப்புக் காணியும், நவாலி வடக்கு அட்டகிரி பாடசாலை, அட்டகிரி முருகன் கோயிலுக்கு அருகாமையில் 6 பரப்புக் காணி வீட்டுடனும் விற்பனைக்கு உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.: 021 4908147,
0750412876. (4013)

**வீடு விற்பனைக்கு**

சங்குவேலி தெற்கு மானிப்பாய் முற்சந்திக்கு அருகில் அமைந்துள்ள 2 பக்க சுற்றுமதிலுடன் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு [ 3 அறை, 2 விறாந்தை ] உடன் விற்பனைக்கு உண்டு. [பயன்தரும் 25 தென்னை, 4 மாமரம், 2 பலா மரங்கள் உண்டு]

தொடர்பு: 0779301745, 0776917155 (4025)

தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும்.

கொழும்பு பல்கலைக்கழக BIT
கற்கை நெறியினை கற்கும் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

மாணவர்கள் உயர்ந்த பெறுபேறுகள் பெறுவதற்கு உத்தரவாதம்
தனிப்பட்ட கவனத்துடனான விரிவுரைகள்

2, 4 ம் தவணைகள்
ஆரம்பம் - 12-03-2011 சனிக்கிழமை காலை 10.00 மணி

BIT CORNER
Professional ICT Education



தொடர்புகளுக்கு:
14, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்
0776621745


## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 28 . 08 . 1929

மறைவு 08 . 02 . 2011

கடந்த 08.02.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் ஐயாத்துரை மனோன்மணி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 13.03.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பங்களா லேன்,
மல்லாகம்.

-குடும்பத்தினர் (4016)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org